1406

Registered. No. M. 878.

6 - MAR 1921

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art And Civilization,,

தொகுதி 8 | 1917-ஞு ஆகஸ்டுமீ பிங்களஞு ஆவணிமீ | பகுதி 4

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L., F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை

(CONTENTS.)

பக்கம்

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 121
Current events—R. Rangaswami Iyer, B. A.

2. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குராசமி ஐயர் 129

3. நக்ஷத்திரப் பிரகாசம்—ஜகத்குருதாஸன் 133
Starlight—Jagadgurudasan

4. விக்கிரஹ ஆராதனை—அ. நாராயணஸாமி 137
Image worship—A. Narayanaswami

5. ஜகத்குரு அவதாரம்—ஜினராஜதாஸர் 144
Coming of the World Teacher—C. Jinarajadasa

6. பத்திரிகை வரவு 149, 157
Review of Joarnals

7. பரமன் வரவு—ஞானானந்தன் 150
Coming of the Teacher—Gnanananda

8. சமாசாரம்-News 152, 159

9. ஒரு கதை—சோமசன்மா 154
A Story—Somasanma

10. புத்தகவரவு—Review of Books 158

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாராதது. பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், ஸிட்னீ நகரில்கன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு முன் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்,
பிரஹ்மக்ஞான மந்திரம்,
மதுரை.

1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும்.

பார்சல்கள் வாங்கும்பொழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லேபிலைப் பார்த்து வாங்குங்கள்.

உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி மூறப்பா கவர்மெண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கத்தகாத மருந்துகள் பலவற்றைப் பிரசுரம்செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம் ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆனதால், ஆரோக்கிய பாக்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதவசியம். இல்லாவிட்டால் நானாவிதமான வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஸ்தான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியைத் தருவித்து அதில் மூறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி மூறப்பா மூத்திர சம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேகவித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அப்படி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி மூறப்பா மிகவும் மேன்மையானது. தவிர மற்றெதுவும் இம் மூறப்பாவுக்கு ஈடாகாது. இம் மூறப்பாவில் எவ்விதமான கெட்டபதார்த்தங்களும் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்மூறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக் கொடுக்கும். 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி. மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி. மன்னாலால், டில்லி வைத்தியர்,

நெ. 5. ஆவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

விளம்பரம்

உதாஸீந ஸாது ஸ்தோத்திரம்:—(பி. ஆர். சுந்தரராஜ ஐயர்) இது ஓர் அருமையான ஸம்ஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஓர் யதியால் இயற்றப்பெற்றது. இது பாம்பின் நடையெனப் பொருள் தரும் புஜங்கப் பிரயாதமாகிய சந்தத்தில் இன்னிசையான பதங்களால் இசைக்கப்பட்டது. உலகின்கண்ணுள்ள எல்லாவற்றுள்ளும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள மஹான்களைப்பற்றிய துதியாக இச்சுலோகங்கள் திகழ்கின்றன. இதில் மஹான்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களநேக முள்ளன. தமிழ் மொழிபெயர்ப்பு, குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணா

த்யானக்கிரம விஷயம்:—(கே. எஸ். ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் தினசரி நடபடிக்கைகளில் ஸத்யத்தையும், தர்மத்தையும சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இலகுவாக "ஸற்குரு சரணைகளில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்பியசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அனுஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் வகுக்கப்பட்டு; தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகி யிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானித்து நற்பயன் பெறுமாறு விலை சொற்பமாக 4-அணா வீதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரஹ்மஞான மந்திரம் மதுரை

விலை 'மரணபயம் வேண்டாம்.' அணா 2.

ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். !!

காலம் சென்ற பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., எப். டி. எஸ். ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை பிரஹ்மஞ்ஞான சபை பிரசிடெண்டு அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. ஸ்ரீமான் லெட் பீடர் அவர்களுடைய அருமையான "To those who mourn" என்ற புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு.

வெகு இலகுவாய் யாவரும் அறியும்படி தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டியது. இச்சஞ்சிகை 158-ஆம் பக்கம் பார்க்க.

விலை சொற்பம் அணா 2 மட்டும்.

பிரஹ்மக்ஞான, மந்திரம்,

மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-௵ ஆகஸ்டு௴ பிங்கள௵ ஆவணி௴ | பகுதி 4

தற்கால நிலைமை.

அடியில் கண்டபடி ஸ்ரீமான் ஜினராஜதாஸரவர்கள் நியூ இந்தியாவில் நாளிது ஆகஸ்டு மாதம் 3ஆம் தேதிப் பத்திரிகையில் பிரசுரித்திருப்பதைப் பார்த்து யாவரும் மிகவும் விசனப்படுவார்கள். "உதக மண்டலத்தில் போய் ஒரு வாரம் தங்கியிருந்து விட்டு இப்பொழுதுதான் திரும்பிவந்தேன். அங்கிருக்கும்போது தினந்தோறும் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாள், ஸ்ரீமான் வாடியா, ஸ்ரீமான் அருண்டேல் இம்மூவருடன் சிறிது நேரம் கழித்தேன். அம்மையவர்களின் தோற்றம் முற்றிலும் மாறியிருந்தது. மாறுதலைப்பார்த்து மிகவும் திகிலடைந்தேன். ஆச்சரியகரமான சுறுசுறுப்புடன் இடைவிடாது ஓயாமல் வேலை செய்து கொண்டுவந்த இவ்வம்மணி திடீரென ஒரு வேலையும் செய்யாமல் சும்மாவிருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்

அறிவிப்பு:—அச்சிடக் காகிதம் இன்மையால் இச்சஞ்சிகை வெளிவரத் தாமதமாயிற்று. அதை நேயர்கள் மன்னிப்பார்களாக. இனிமேல் யாதொரு தாமதமும் இல்லாமல் சஞ்சிகைகள் வெளிவரும்.—பத்திராதிபர்

பட்டால், அவர்களுடைய நரம்புகளும், நாடிகளும், சரீரமும், சிதைவடையும் என்பதை நாம் ஒருவாறு யூகித்தறியலாம். அம்மையவர்களுக்குத் தூக்கமே வெகுவாய்ப் போய்விட்டது. ஆகாரமும் சரியாய்ச் செல்லுகிறதில்லை. இத்துடன் அடிக்கடி சிறிய விஷயங்களிலும்கூட ஏற்படும் நிர்ப்பந்தங்களுக்கும் இம்மூவரும் உள்ளாகியிருக்கிறார்கள்.

மேற்கூறிய காரணங்களால் அம்மையவர்கள் தேகம் மிகவும் சிதைவுற்றிருக்கிறது. சென்ற இருபத்திரண்டு வருஷங்களாக அம்மை அவர்களுடன் நன்றாய்ப் பழகிய நான் இதுவரை இவ்வளவு கஷ்டப்பட்டதைப் பார்த்ததில்லை. ஆனால் யாதுகாரணம் பற்றி அவர்கள் நிர்ப்பந்தத்திற்குள்ளானார்களோ அக்காரியம் சரியானபடி நடந்தேறி வருகின்றது என்ற ஆறுதல்மட்டும் அவர்கள் மனதைத் திடப்படுத்துகிறது."

*
* *

உதக மண்டலத்திலிருந்து ஆகஸ்டுமீ 8உ யன்று சென்னை வந்திறங்கிய கனஸ்ரீ மஸ்ரூல் ஹேக் என்ற தேசபக்த சிகாமணி சொல்லுவதைக் கேட்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. "அம்மாள் அவர்கள் மிகவும் துர்பலமாயிருக்கிறார்கள். விசேஷமாக நடக்க முடியவில்லை. உடம்பும் மிகவும் மெலிந்திருக்கிறது." என்று சொல்லுகிறார் சென்ற டிசம்பர் மாதத்தில் லக்ஷ்மண புரிக்கும் காசிக்கும் மத்தியிலிருக்கும் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் ரயில்வண்டி புறப்படச் சிறிதுநேரம்தானிருக்கும்போது கடைசியில் இருந்த ஒரு வண்டியிலிருந்து முதலில் இருந்த ஸ்ரீமான் அம்பிகா சரண முஜும்தார் இருந்த வண்டிக்கு அம்மையவர்கள் விரைவாய் நடந்து சென்றபோது, பால்யப் பருவத்திருந்த ஸ்ரீமான் ஹேக் கூடத்தொடர்ந்து நடக்க முடியவில்லையாம். அவ்வளவு சுறுசுறுப்பும் திடமும் வாய்த்திருந்த அன்னையவர்கள் இப்போது இந்த ஸ்திதிக்கு வந்துவிட்டால் யார் மனம்தான் தாங்கும்? எவ்வளவு காலம் இவ்விதம் அவர்கள் கஷ்டப்பட வேண்டுமென்று கடவுளது திரு

வுள்ளமோ? இவ்விஷயங்களை யெல்லாம் பார்த்து ராஜாங்கத்தார் அம்மையவர்களை விடுவிக்க மாட்டார்களா? இறைவன் எண்ணம் எப்படியோ அறியோம்.

***

சின்னாட்களுக்கு முன்னர் மதனப்பள்ளி காலேஜ் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் வி. எஸ். திரிலோகேகர் அவர்களும் நீலகிரிக்குப் போய் மூவரையும் பார்த்து வந்தவர்கள் மூவர்கள் படும் துன்பங்களைப்பற்றி யெழுதினர்கள். இவ்விதமாய் லோகோத்தரமான செயல்களையும், பரோபகாரத்தையும், உதாரகுணத்தையும் படைத்த இம்மூவரும் படும் துயரத்தைப்பற்றி நினைக்கும் தோறும், ஒவ்வொரு இந்தியனுடைய மனதும் மிகவும் வருந்தும். திரிகரண சுத்தியாய் இந்நிர்ப்பந்தத்திற் குள்ளாக்கும்படி யாதொரு குற்றமும் இவர்கள் செய்திருக்க முடியாதென்று நாம் நம்புகிறோம். அப்படியிருக்க நாம் இப்போது செய்ய வேண்டிய கடமை யாது, என்று உன்னுவோம்.

***

பிரஹ்மஞ்ஞான சபையைச் சேர்ந்த நாம் நன்றாய்த் தெரிந்துகொண்ட விஷயமாவது என்னவென்றால், மனதின் சங்கற்ப சக்தியானது மிகவும் பலமுள்ளது என்பதே. சாதாரணமாய், பெரும்பாலர் மனதைச் சிதரவிடாது ஒருமைப் படுத்தி, தீவிரமாய் ஒரு விஷயத்தைப் பற்றி சங்கற்பிப்பதே வழக்கமில்லை. ஆகையால் சங்கற்ப சக்தியின் மகிமையைச் சாதாரண ஜனங்கள் அறிகிறதில்லை. ஆனால் தற்போது இந்தியாவில் இருக்கும் ஸ்திதியைப் பார்த்தால், சாதாரண ஜனங்கள்கூட, நமது அன்னையவர்கள் செய்த பேருபகாரத்தை யறிந்து, அவர்களை நிர்ப்பந்தித்ததை மிகவும் கடிந்து, ஊர்ஊராய் ஒருங்கேகூடி, தீர்மானங்கள் செய்து, அத்தீர்மானங்களை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிறார்கள். இவ்வாறு சாதாரண ஜனங்கள், பிரஹ்மஞ்ஞான சபைகள், நக்ஷத்திர சபைகள், ஸ்வராஜ்ய ஸமாஜங்கள்,

ஜில்லா சபைகள், ஜில்லா காங்கிரஸ் சபைகள், முதலிய கூட்டங்களும், பத்திரிகைகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது நம் மூவரையும் விடுவிக்க வேண்டும் என்று மனதில் சங்கற்பிக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. நமது பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர் தினந்தோறும் குறிப்பிட்ட காலத்தில் மனதை ஒருமித்து இம்மூவரையும் விடுவிக்கும்படி அதிகாரிகளுக்கு மனதில் நல்லெண்ணம் உதிக்க வேண்டும் என்றும் தியானம் செய்தால் அது இன்னும் சிலாக்கியமாகும். இந்தியாவின் மகிமைகளில் முக்கியமானது க்ஷேத்திரங்களில் விளங்குகிற அருட்பிரகாசங்கள். ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும், தொன்று தொட்டு விளங்கும் சிற்சக்தியை, அருட்பிரகாசத்தை, ஈசுவர சான்னித்தியத்தை இறைஞ்சி, நம்முடைய உண்மையான பிரார்த்தனைகளைத் தெரிவித்து, அர்ச்சனை அபிஷேகங்கள் செய்து, வழிபட்டால் அது வீண் போமா? ஒருக்காலும் போகாது. இம்மாதிரி தென் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு திவ்ய க்ஷேத்திரத்திலும் பக்தர்கள் ஆராதனை, அர்ச்சனை, அபிஷேகம் முதலிய நடத்தி மூவருடைய விடுதலையைக் கோரி வருகிறார்கள் என்று பத்திரிகைகளில் படித்து வருகிறோம். இந்தியரின் வேண்டுகோள்கள் போதாதென்று, இங்கிலாந்து முதலிய இதர நாடுகளிலும், நமது அம்மையவர்களை யறியாதவர்கள் இல்லையாகையால், அங்கும் பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர்களும், மற்றவர்களும் கூட்டங்கள் கூடி அவர்களை விடுவிக்க வேண்டுமென்று தீர்மானித்து வருகிறார்கள்.

***

ஆகையால் இம்மூவருடைய விடுதலையையும், மேலும், அம்மையவர்களுடைய ஆரோக்கியத்தையும், கோருகிறவர்கள் எல்லோரும், மனதை ஒருமித்துச் சிதறவிடாது, ஈசுவரனைப் பிரார்த்திக்கவேண்டும். அப்படிச் செய்தால் நமது கோரிக்கை நிறைவேறும்.

***

ஆனால் அம்மையவர்கள் வெளியில் வரும் காலம் வரை நாம் வருத்தப் பட்டுக்கொண்டும் அழுதுகொண்டும் இருந்

தல் சரியா? பகவத் கீதையைப் படித்த நாம் அப்படி யிருத்தல் சரியல்ல. எந்த எந்த முயற்சிகள் அம்மையவர்களால் நம்முடைய அபிவிருத்தியின் பொருட்டுத் துவக்கப்பட்டனவோ, அவைகளை முன்னிருந்ததை விடப் பன்மடங்கு உற்சாகத்துடன், கொஞ்சமும் சோர்வுபடாது, கொண்டு செலுத்துவதே நமது கடமையாகும்.

***

வித்யையைப் பெறுவது ஆத்ம லாபத்திற்காகவே யொழிய உதர பூரணத்திற்காக வல்லவென்பது இந்தியாவில் முன் காலத்தில் பெரும்பாலும் உண்மையாய் இருந்தது. ஆனால் இக்காலத்தில் ஆங்கிலம் கற்பவர்கள் விஷயத்தில் இது உண்மையோ வெனில், பெரும்பாலும் இல்லை யென்றே சொல்லலாம். இதன் காரணம் என்ன? இந்தியாவில் சாதாரண ஜனங்களுக்குள் கல்வி பரவி விட்டதா? ஆங்கிலம் கற்றவர்களுக்குத் தெரியும் பௌதிக, ரஸாயன சாஸ்திர அறிவில் கொஞ்சமாவது சாதாரண ஜனங்களுக்குத் தெரியும்படி, தேச பாஷைகளில் புத்தகங்களிருக்கின்றனவா? இந்துதேசசரித்திரம் நமது இந்தியச் சிறுவர்களுக்குச் சரியானபடி கற்பிக்கப் பட்டிருக்கிறதா? தான் இந்தியன் என்று தலை நிமிர்ந்து, பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளும்படி ஆங்கிலப் பள்ளிகளில் நமது சிறுவர்களுக்குக் கற்பிக்கப் படுகிறதா? பூர்வ காலத்திலும், சமீப காலத்திலும் இப்புண்ய பூமியில் அவதரித்த மகான்களுடையவும் உத்தமிகளுடையவும், சரிதத்தை மனப் பூரிப்புடனும், உத்ஸாகத்துடனும் நமது பள்ளிகளில் கற்பிக்கிறார்களா? இந்திய ஸங்கீதத்தைப் பற்றி நமது சர்வ கலாசாலைகளில் பரீக்ஷிக்கிறார்களா? தேறினவர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கிறார்களா? இந்தியாவில் உள்ள பெயர்பெற்ற புராதன சித்திரங்களைப் பற்றியாவது இந்தியரால் தீட்டப்பட்ட நவீன சித்திரங்களைப் பற்றியாவது இந்தியச் சிறுவர்களுடைய பாடப் புத்தகங்களில் கூறப்படுகிறதா? நமது பள்ளிகளில் இந்தியாவைப் போற்றிய கீதங்கள் நம்மவருக்குக் கற்பிக்

கப் படுகின்றனவா? ஆங்கிலம் கற்ற இந்தியர் ஒருவருக் கொருவர் எழுதிக்கொள்ளும் கடிதங்கள் எந்த பாஷையில்? சுதேச பாஷையில் சம்பாஷிக்கிறார்களா அல்லது ஆங்கிலத்திலா? இந்தியாவின் வடக்கே இந்திய மாதாவுக்கு கிரீடம்போல் விளங்கும் ஹிமயமலையின் உயர்ந்த சிகரத்தை எவரஸ்டுமலை யென்று சொல்லுகிறோமா அல்லது ஆதிகாலந் தொட்டு வழங்கி வந்த கௌரிசங்கர் என்ற அழகிய பெயரால் குறிக்கிறோமா? அந்தப் பெயர் உண்டு என்று கூட அனேகருக்குத் தெரியாதல்லவா? நம்முடைய அரிய கிரந்தங்களைக்கூட மேனாட்டு நிபுணர் ஆமோதித்த பிறகேதான் நாம் போற்றப் பழகி வருகிறோமல்லவா? கவீந்திரராம் ரவீந்திரநாத டாகோருடைய பெருமையைக்கூட மேனாட்டார் போற்றிய பிறகே நாம் அறிந்தோமல்லவா? ஸமஸ்கிருத இலக்கணத்தையும் இலக்கியத்தையும்கூட ஆங்கிய வாயிலாகக் கற்றுக்கொடுப்பது நமது பள்ளிகளில் வழக்கமில்லையா? நம்முடைய சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் வித்யா இலாகாவின் தலைப்பில் இந்தியர் அதிகாரியா யிருக்கிறாரா அன்னியரா? சர்வகலாசாலையில் "செனட்டில்" பெரும்பான்மையராகவும், முக்கிய அதிகாரிகளாகவும் இருப்பவர் இந்தியரா மற்றவரா?

* * *

மேற்கண்ட கேள்விகளுக்கு என்ன விடை என்று ஆலோசிப்போம். ஆங்கிலப் பள்ளிகளை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஸ்தாபிப்பதற்குக் காரணம் என்ன என்று சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். ஆங்கிலேயர் இந்த தேசத்தை ஆளத்தொடங்கியது முதல் இந்திய பாஷைகளை அவர்கள் போதுமான மட்டிலும் கற்கமுடியவில்லை யாதலால் சர்க்கார் உத்யோகத்தை வகித்து சரியான கணக்குகளை முடிக்கவும், வசூல்கள் செய்யவும், மற்றும் குமாஸ்தா வேலைகள் செய்யவும ஏராளமான வேலைக்காரர் தேவையாயிருந்ததாலும், அந்தப்படி வேலைக்காரர்கள் ஆங்கிலத்தில் பயின்றவர்களா யிருந்தால் மட்டும் ஆங்கில உத்தியோகஸ்

தர்கள் கணக்கு, அறிக்கை முதலானவைகளையும் பார்வை
யிட முடியுமாகையாலும் அந்தக் காரணம் பற்றி ஆங்கிலப்
பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பெற்றன. அது முக்கிய
நோக்கமாயிருந்து அப்பால்தான் மேனாட்டு நாகரீகத்தைப்
புகட்டுவது இரண்டாவது நோக்கமா யிருந்தது. ஆகை
யால்தான் நம்முடைய பள்ளிக்கூடங்களிலிருந்து தேர்ந்த
வர்கள் இப்போது இருக்கும் தன்மையரானார்கள். இந்திய
கலாசாலைகளுக்கும் சர்வ கலாசாலைகளுக்கும் ஆதிகாரணஸ்
தரான லார்டு மெகாலே என்ற பிரபு மிகவும் உயர்ந்த மன
தை யுடையவர்தான். நல்ல எண்ணமுள்ளவர்தான். ஆனால்
அவர் இந்திய நாகரீகத்தின் நோக்கத்தையாவது அதன்
அருமையையாவது அறிந்தவரில்லை. மேனாட்டு நாகரீகத்
தால் மட்டும் இந்தியர் சீர்திருத்தம் பெறவேண்டுமென்று
நினைத்தார். ஆகையால் இந்திய பாஷைகளும் நூல்களும்
உபயோகமற்றவை என்று கருதப்பட்டன. பள்ளிகளில்
ஆங்கிலத்தில் பேசுவதே கௌரவம் என்று நினைத்தார்கள்.
ஆங்கில சரித்திரம்தான் முக்கியமாய்க் கற்பிக்கப்பட்டது.
இந்துதேச சரித்திரத்தையும் அதிலும் ஹிந்து அரசர்க
ளைப் பற்றியும் விசேஷமாக ஒன்றும் கற்பிக்கப் படவில்லை.
கற்பிக்கப் பட்டவையும் இந்தியர் கௌரவத்துக்கு ஆகக்
கூடியவையா யில்லை. கிறிஸ்தவப் பள்ளிகளில் ஹிந்து மத
மானது பெரும்பாலும் மூடத்தன மானதென்று இகழப்
பட்டது. ஆகையால் கூடிய சீக்கிரத்தில் ஆங்கிலக் கல்லூரி
களில் பயின்ற மாணாக்கர் இந்தியன் என்று சொல்லத் தலை
கவிழ்ந்தவரானார். மேனாட்டு நடையுடை பாவனைகளை யனு
சரித்து, அத்துடன் மேனாட்டுத் தீய வழக்கங்களாகிய குடி
ஊனைத் தின்றல் முதலியவைகளையும் அப்பியாசிக்கலானார்.
'ஆங்கிலத்திலேயே என் மனம் சிந்திக்கிறது. ஆங்கிலத்தில்
நினைத்து அதை தமிழில் மொழி பெயர்த்துப் பேசவேண்டி
யிருக்கிறது' என்று சொல்வதில் பெருமையென்று நினைக்க
லானார்கள். முன் காலத்தில் டாக்காவில் "காற்றை செய்த
கனவுபோல்" உண்டாக்கப் பெற்ற அருமையான துணியை
யெல்லாம் மறந்து இந்தியாவிலுண்டாக்கப் பட்ட சுதேசி
சாமான் என்றால் பிரயோஜன மற்றது தான் என்று இகழ்
வது பெருமை யென்று நினைக்கலானார்கள்.

ஆனல் எல்லோரும் இப்படி இருக்கவில்லை. சிலர் இந்தியாவின் பெருமையையும், இந்திய நூல்களின் சிறப்பையும், ஞான சாஸ்திரங்களின் உயர்வையும் அறிந்தார்கள். பிரஹ்மஞான சபையின் தலைவர்களான கர்னல் ஆல்காட், பிள்வாட்ஸ்கி அம்மாள், அன்னிபெஸண்டு அம்மாள் முதலியவர்களுடையவும், ஸ்வாமி விவேகானந்தர், பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், தயாநந்த ஸரஸ்வதி முதலிய பெரியவர்களுடையவும் முயற்சியால் இந்தியர் தம்முடைய பெருமையை வரவர அறியலானார்கள். இருந்தபோதிலும் கல்லூரிகள் இப்போது நடைபெறுவதுபோல் நடைபெற்று வரும் வரை, இந்தியர் தம்முடைய பூரணமான பெருமையை அடைய முடியாதென்றும், உலகத்தில் ஒவ்வொரு தேசத்துக்கும், ஜாதிக்கும் சுபாவமான ஏற்ற கடமையொன்றுளதுபோல் இந்தியர் தங்களுடைய சுதர்மத்தை நிறைவேற்ற வேண்டியது கடமையென்றும் அப்படித் தங்களுடைய சுதர்மத்தை நிறைவேற்ற வேண்டுமானல், இந்தியரே தம்முடைய தர்மம் எது என்று தீர்மானித்து, அவர்களே ஏற்படுத்தி அவர்களாலே ஆளப்பட்ட சர்வ கலாசாலைகளும், கல்லூரிகளும் ஏற்பட்டால் தான் ஆது சாத்தியம் என்றும் சில மதியூகிகள் நினைக்கலானார்கள்.

*
* *

ஹரித்துவாரத்துக்குச் சமீபத்தில் ஆரிய சமாஜத்தாரால் ஸ்தாபிக்கப் பெற்ற குருகுலமும், ஸர் ரவீந்திரநாத டாகோர் நடத்திவரும் போலபூர் சாந்தி நிகேதனக் கலாசாலையும் மசூலிபட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆந்திர ஜாதீய கலாசாலையும், இவ்வுயர் நோக்கங்கொண்டு உண்டானவைகள்.

*
* *

ஆனல் இவைகள் துண்டு துண்டாய் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவைகள். இப்போது ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் ஸர்வ கலாசாலைகளின் ஆளுகைக்குள் அில்லாமல் புதிதாக ஒரு இந்திய வித்தியா பீடம்

153-ஆம் பக்கம் பார்க்க.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம் 21.

இச்சா சரீரம்:—தொடர்ச்சி.

இச்சா சரீரமானது ஸ்தூல சரீரத்தைவிட அதிக நுண்ணிய அணுக்களால் அமைக்கப் பட்டிருப்பதினுலே வெகு லெகுவாய் ஒருக்ஷணத்தில் சிறுத்துப் பெருக்கும் தன்மையுள்ளது. ஆகையால் ஒவ்வொரு பலமான மனச் சலனத்தினுலும் ஒவ்வொரு பலமான ஆசையினுலும் அதன் உருவம் அடிககடி மாறிக்கொண்டிருக்கும்.

ஸ்தூல சரீரத்தின் உருவத்தில் ஒரு மாறுதல் உண்டாவதற்கு வெகு காலம் செல்லும். நாம் ஸ்தூல சரீரத்திலிருக்கும்போது நம்முடைய மனதிற்குள் உண்டாகும் எவ்வித கெட்ட எண்ணங்களையும் இச்சைகளையும் மறைத்துக் கொண்டு வெளிக்கு வெகு நல்லவன்போல் நடித்துக் காட்டலாம். இச்சா சரீரத்தில் நாமிருக்கும்போது அவ்விதம் காட்ட முடியாது. ஏனென்றால், முன் சொன்னபடி மனத்தின் கண் உண்டாகும் எண்ணங்களுக்குத் தக்கபடி அது க்ஷணத்துக்கு க்ஷணம் உருவம் மாறுகிறபடியால் உள் எண்ணங்களை நன்றாய்க் காட்டிவிடும். ஆகையால் நாம் எவர்களைக் கெட்ட ஜனங்களென்று சொல்லுகிறோமோ, அதாவது எவர்களிடத்தில் கோபம், விரோதம், பொறாமை, பேராசை முதலிய துற்குணங்கள் அபரிமிதமாயிருக்கின்றனவோ, அவர்களுடைய இச்சா சரீரமானது அவலக்ஷணமுள்ளதாயும் பரும்படியாயும் இருக்கும். தவிர, அதன் நிறமானது மங்கலாயும் அழுக்குப் பிடித்ததுபோலும் இருக்கும். அனேக ஆபாசமான வர்ணங்கள் அச்சரீரத்தின் பேரிலும் அதை ஊடுருவிக்கொண்டு மிருக்கும். தீவிரமான மனச் சலனங்கள் உண்டாகும் பொழுதெல்லாம் இச்சா சரீரத்தின் உருவம் பற்பல விதமாய் மாறிக்கொண்டிருக்கும்.

நல்ல ஜனங்கள்;—அதாவது நன்மையும் அன்பும் பொருந்திய காரியங்களைச் செய்ய முயலுகிறவர்களும் தூரா

சை முதலிய கெட்ட எண்ணங்களைத் தடுத்து, அன்பு, சுயநலம்கருதாமை, இரக்கம் முதலிய நல்ல குணங்களை விருத்தி செய்து வருகிறவர்களுமான ஜனங்கள்—அழகான இச்சா சரீரங்களை யடைந்திருக்கிறார்கள். அச் சரீரங்கள் மகா பிரகாசமுள்ளவைகளாகவும் பல அழகான வர்ணங்களுள்ளவைகளாகவும் இருப்பதினாலே இச்சா சரீரங்களின் தன்மையைப் பற்றி அறிந்திராதவர்கள் அவைகளைப் பார்க்கும்போது தேவதைகளென்று தப்பாகநினைப்பார்கள்.

இராக் காலங்களில் நம்முடைய இச்சா சரீரங்களுடன் உலாவித் திரியும்பொழுது கண்ட இன்பமான காட்சிகளையும் பிறருக்கு உதவி புரிகிறவர்களாய் அப்போது நாம் செய்த நல்ல வேலைகளையும், விடியற் காலத்தில் நாம் ஞாபகத்துக்குக் கொண்டு வருவோமாகில் எவ்வளவு ஆனந்தமாயிருக்குமென்பதைச் சற்று யோசித்துப் பார். அவ்விஷயங்களை எவ்விதம் ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறதென்பதைப் பற்றி பிரஹ்மஞானம் நமக்குக் கற்பிக்கின்றது.

சில சமயம் குழந்தைகள் தாங்கள் பிறருக்கு உதவி புரிந்த சொப்பனங்களை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறார்கள். ஒருவேளை நடக்க முடியாத ஒரு நொண்டிக் குழந்தைக்கு அது நடப்பதற்கு ஒத்தாசை செய்திருக்கலாம்; திகிலடைந்திருக்கும் ஒரு குழந்தையை நெருப்புப் பற்றி எரியும் வீட்டிலிருந்து வெளியே வர வழி காட்டியிருக்கலாம்; அதிக ஆழமுள்ள கிணற்றின் கரையின் ஓரத்தில், அல்லது செங்குத்தான உச்சியில் விளையாடிக்கொண்டிருக்கிற, அல்லது சீக்கிரத்தில் அதிகமாகப் பரவித் தன்னையும் எரித்து விடக்கூடிய நெருப்பை மூட்டி விளையாடுகிற; ஒரு குழந்தையினுடைய தாயார் சமீபத்திற் சென்று அவள் தன்னுடைய சொந்த எண்ணமென்று நினைக்கும்படியாய் அவ்வளவு மெதுவாக அக்குழந்தையின் அபாய ஸ்திதியை அவள் காதில் ஓதி குழந்தை விளையாடு மிடத்துக்குக் கூட்டிச் சென்றிருக்கலாம். இவை போன்ற உபகாரங்களைச் செய்ததாகக் கனவு காணுகிறார்கள்.

இக் கனவுகளெல்லாம் உண்மையே. அன்புள்ள சிறு குழந்தைகளும் வயது சென்றவர்களும் இச்சா சரீரங்களில் திரியும்போது இக் காரியங்களைச் செய்கிறார்கள். ஒத்தாசையை அடைந்தவர்கள் சில சமயங்களில் ஒத்தாசை செய்கிறவர்களைப் பார்க்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் பார்க்கிறதில்லை. அவர்கள் ஒத்தாசையைப் பெறவேண்டியது தான் முக்கியமே ஒழிய ஒத்தாசை செய்கிறவர்களைப் பார்க்காவிட்டாலும் பாதகமில்லை.

வெகு காலத்துக்கு முன் அதாவது கிரிஸ்துவேத புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் விஷயங்கள் நடந்த காலத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் சமாசாரம் அனுப்புவது மிகவும் தாமதமாயும் அதிக அபாயகரமாயும் இருந்தபோது சொப்பனங்களை உபயோகித்து வந்தார்கள். இப்போதும் நம்முடைய இச்சா சரீரங்களை அறிந்து அவைகளை எவ்விதம் உபயோகிக்கிறதென்பதை தெரிந்து கொள்ளும்போது சொப்பனங்களை நாமும் உபயோகிக்கலாம். ஆனால் ஒன்றுக்கும் உபயோகமில்லாத முட்டாள்த்தனமான சொப்பனங்களும் இருக்கின்றன. அவைகளைப் பற்றி வேறொரு பாடத்தில் விவரமாய்ச் சொல்லுவோம்.

அழகுள்ளதும் உபயோகமுள்ளதுமான இச்சா சரீரம் வேண்டுமானால் உன்னுடைய மானச சரீரத்தை நிர்மாணம் செய்வதுபோல அவ்வளவு ஜாக்கிரதையுடன் நீ அதையும் நிர்மாணம் செய்யவேண்டும். மானச சரீரத்துக்கு சுத்தமான எண்ணங்களை உபயோகிப்பதுபோல இச்சா சரீரத்துக்கு சுத்தமான மன எழுச்சி, உணர்வு, இச்சை இவைகளை உபயோகிக்கவேண்டும். எண்ணமானது எப்போதும் மனஎழுச்சிகளுடனும் இச்சைகளுடனும் கலந்திருக்கும். ஆனால் இச்சைகளுடன் சேர்ந்த எண்ணங்கள் தான் இச்சா சரீரங்களைக் கட்ட உதவும்.

உன்னுடைய மனச் சலனங்களையும் உணர்ச்சிகளையும் இச்சைகளையும் கெட்ட ஸ்திதியிலிருந்து நல்ல ஸ்திதிக்கு மாற்றலாம். உன்னுடைய எண்ணங்களை மாற்றுவதுபோல இச்சைகளையும் மாற்றலாம்.

உதாரணமாக, உனக்கு எவனிடத்திலாவது வெறுப் பேற்பட்டால் அது பிசகென்று உனக்குத் தெரியும். வெறுப்புக்குப் பதிலாக நீ யதை விருப்பமாக மாற்ற விரும்பினால் அப்போது நீ நேராகப் போய் அவனுக்கு அன்புடன் ஒரு உதவியைச் செய். பின்பு நீ யவனைப் பற்றி நினைக்கும் போதும் அவனைப் பார்க்கும்போதும் அவனுக்கு நீ செய்த உதவியானது உன் ஞாபகத்துக்கு வந்து அதனால் நீ சந்தோஷமடைவாய். அதிலிருந்து நீ யவனை நேசிக்கவாரம்பிப்பாய். இவ்வன்பானது உன்னுடைய இச்சா சரீரத்தில் நூதன அழகாகப் பிரகாசிக்கும்.

அவ்விதமன்றி நீ மற்றவர்களைப் பற்றி அன்பில்லாத வார்த்தைகளைப் பேசவும் அன்பில்லாத காரியங்களைச் செய்யவும் இடங் கொடுப்பாயானால் நீ அவர்களைப் பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் உன் மனச் சாட்சியானது உன்னைப் புண்படுத்திச் சந்தோஷ மற்றவனாகச் செய்யும். இது உனக்கு மனத் துன்பத்தையும் கோபத்தையும் உண்டு பண்ணுவதால் நீ அவர்களைப் பார்ப்பதற்குக்கூட வெறுப்படைவாய். இவ்விதம் நீ உன்னுடை இச்சா சரீரத்தில் பரும் படியும் விகாரமானதுமான வர்ணங்களைச் சேர்த்து வைத்து அதைக் கெடுத்து விடுவாய். அன்றியும் நீ உண்மையுள்ளவனாகவும அன்புள்ளவனாகவும் இருந்தாலொழிய இச்சா சரீரத்திலிருக்கும்போது உண்மையை உன்னால் பார்க்க முடியாது. ஏனெனில் உன்னுடைய எண்ணங்களாலும் உணர்ச்சிகளாலும் உண்டாக்கப்பட்ட உருவங்கள் தான் உன்னுடைய இச்சா சரீரத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கும்.

வி. வெங்குசாமி ஐயர்.

நக்ஷத்திர பிரகாசம்

பக்தி என்பது என்ன? பக்தியுள்ளவர்கள் என்று யாரைச் சொல்கிறோம்? சிரத்தையோடு கோவிலுக்குப் போய் அர்ச்சனை முதலிய வழிபாடுகளை யார் யார் செய்கிறார்களோ, அவர்களை பக்தியுடையவர்களென்று சொல்கிறோம். நாம் கோவிலுக்குப் போவானேன்? கோவிலில் கடவுளைக் காண்கிறோமல்லவா? கடவுள் கோவிலில் இருக்கிறாரென்பதை நாமெல்லோரும் நன்கு அறிவோம். ஆனாலும் நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு உயிர்ப்பிராணியிடத்தும், ஒவ்வொரு வஸ்துவிலும் கடவுள் இருக்கிறார் என்பதையும் நாம் அறியவேண்டும். அப்போது எல்லாரிடத்தும், எல்லாப்பிராணிகளிடத்தும், எல்லா வஸ்துக்களிலும் கடவுளைத் தரிசிக்கப் பழகுவோம். கோவிலில்மட்டும் கடவுளைத் தரிசிக்கப் பழகுவதைக் காட்டிலும், எங்கும் கடவுளைத் தரிசிக்கப் பழகுவது எவ்வளவு மேன்மை? கடவுளைத் தரிசிக்கும் போதெல்லாம் நம் மனம் குளிர்ந்திருக்கிறது சந்தோஷமா யிருக்கிறோம். எல்லாவிடங்களிலும், எக்காலத்திலும் எல்லா வஸ்துக்களிலும் கடவுளைத் தரிசிப்போமானல், எப்போதும் ஆனந்தமா யிருக்கலாமல்லவா?

கடவுளை எப்படிப் பார்ப்பது? நம் வெளிப் பார்வையினால் முடியாது. உட்பார்வையினால் தான்கூடும். எதெது சுத்தமாயும், அழகாயும், உபயோகமுள்ளதாயும் இருக்கிறதோ, அதையெல்லாம் நாம் கொண்டாடுகிறோம். அதிலெல்லாம் நக்ஷத்திரம் பிரகாசிக்கிற தென்கிறோம்; கடவுள் விளங்குகிறா ரென்கிறோம். அப்படியே, அவலக்ஷணமாயும், பயனற்றதாயும், துன்பத்தைமட்டும் தரக்கூடியதாயும் தோன்றுகிற அநேக விஷயங்களிலும் கடவுள் விளங்குகிறார்.

உதாரணமாக, இரண்டு கண்ணும் தெரியாத ஒருவன் வழியில் தட்டித் தமோறிப் பிச்சை கேட்டுக்கொண்டு

போகிறான். அவனைப்பார்த்து எல்லோரும் இரக்கங்கொள்கிறார்களல்லவா? பலர் அவனுக்கு பிச்சை போடுகிறார்களல்லவா? நமது வெளிப் பார்வைக்கு அவன் அவலக்ஷணமாய்த் தோன்றினாலும், அவனிடத்திலும் கடவுள் இருக்கிறார் என்பதை அறிந்துதானே அவனுக்குபகரிக்கின்றோம். தர்ம வைத்தியசாலையில் எத்தனையோ வியாதிக்காரர்களைச் சௌக்கியம் பண்ணுகிறார்கள். வியாதிஸ்தர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார் என்பதை அறிந்துதானே, அவ்விதம் சிகித்ஸை செய்கிறார்கள். அரையிலுடுக்க வஸ்திரமில்லாமலும், உண்ண உணவில்லாமலும் அலையும் ஏழைப் பிள்ளைகள் எத்தனைபேர்? அவர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார் என்று கருதித்தானே பஞ்சமர் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து வருகிறோம்.

ஆகவே, உலகத்தில் எவ்வளவு துன்பங்கள் இருக்கின்றனவோ, அதற்குத் தக்கபடிதான் நமது தயை என்னும் சுபாவமும் வெளிப்படுகிறது. துன்பங்கள் இருக்கிறபடியால் தான், அத்துன்பங்களை நீக்க எண்ணி, முயலுகிறோம் அப்படி முயலுவதால்தான், நமக்குத் திறமையும், அநுபவமும் உண்டாகின்றன. ஒரேகடவுள் நம் எல்லோரிடமும் இருக்கிறார், ஆகையால் நாம் எல்லோரும் சகோதரர்கள், என்பதை உணராமையால், பிறர் துன்பங்களைத் தமது துன்பமாகப் பலர் கருதுகிறார்களில்லை. உலகத்திலுள்ள மஹான்கள் யாரைப் பார்த்தாலும், அவர்கள் உலகத்தின் துன்பத்தைத் தமது துன்பமாகவே எண்ணி, அதை நிவர்த்திக்க முயன்றிருக்கிறார்கள். அப்படியே நாமும்பிறரிடத்து அன்பு பாராட்டி, பரோபகாரிகளாய் நடப்பதற்கே, நமக்குப் பெண்டு பிள்ளைகளும், மனைவிமக்களும், உற்றார் உறவினரும், அல் அயலார்களும், ஏற்பட்டிருக்கின்றனர். நமக்கு சொந்த ஊரென்றும், ஸ்வதேசமென்றும் ஏற்பட்டிருப்பனவெல்லாம், பிறருடைய க்ஷேமத்தைக்கருதி நாம் தீவிரமாய் உழைப்பதற்கேயாம்.

தற்காலத்தில் நமது இந்தியாவில் ஸ்வதேசாபிமானம் நமக்குள் அதிகமாகிவருகிறது. அதாவதென்னவென்றால், "ஹிந்துக்கள், மகம்மதியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள் ஆகிய எல்லோரும் இந்தியா வாகிய ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள். நமது தேசம் நாளுக்கு நாள் ஒற்றுமையடைந்து வருகிறது, ஜாதிமத பேதங்கள் எவ்வளவிருந்தாலும், தக்க கல்விமான்களுள் வித்யாஸமே இல்லை." என்று நாம் ஒவ்வொருவரும் உணருகிறோம்.

முற்காலத்தில் நந் தேசத்து உதித்த ஞானாசார்யர்களின் உபதேசங்கள் உலகமுழுமையும் பரவியதுபோல, அதி சீக்கிர காலத்தில் மறுபடியும் ஒருதரம் பரமாசார்யர் தோன்றி, அவருடைய ஞான மணமும், அன்பின் ரஸமும் உலகமுழுதும் பரவும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காக அநேக மஹாபுருஷர்கள் நந் தேசத்தில் ஜநிக்கக் காத்திருக்கிறார்கள். அதன் பொருட்டு நம் தேசத்தில் நாநாவிதமான துறைகளில் பரிபூர்ணமான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மதம், கல்வி, ஆசாரம், ராஜரீகமுறை இந்நான்கு வகைகளிலும நாம உழைக்கவேண்டிய விதத்தை, மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் நமக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

நமது நக்ஷத்திர ஸஹோதர, ஸஹோதரிகளுக்குள் பள்ளிக் கூடங்களில் படிப்பவர்கள் மட்டும் ராஜரீகமுறையில் உழைக்க இயலார். ஆயினும் நந் தேசமானது ராஜரீக முறையில் எத்தகைய அபிவிருத்தியடைந்து வருகிறதென்பதை மட்டும் கவனித்து வரலாம். மற்றவர்களெல்லோரும் அவரவர்கள் தகைமைக்கு ஏற்ப, மேற்கூறிய நான்கு துறைகளில் ஏதேனும் ஒன்றிற்கோ, அல்லது எல்லாவற்றிற்குமோ, மநப்பூர்வமாய் உழைத்து வருவதே பரமாசார்யனுக்குப் பிரீதியென்பது விளங்குகிறது. ஏதாவதொரு துறையில் மட்டும் நாம் உழைத்து வந்தாலும், மற்ற

வைகளைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

பக்தி யென்றால், கோவிலுக்குப் போவதுமட்டும் அல்ல இன்னும் அநேகவிதங்களில் பக்திசெய்யப் பயிலவேண்டும் கோவிலில் கடவுளைப் பார்ப்பது மட்டும் போதாது. தரித்திரமும், துன்பமும், வியாதியும், அறிவீனமும், பீடித்து வருந்தும் நம் சகோதரர்களிடத்தும் கடவுள் இருப்பதை யறிந்து, அவைகளை ஒரு சிறிதாவது நீக்கமுயன்று வருவோமானால், அதுவே கடவுளைச் சேவித்ததாகும். அதுவே பக்தி. பக்தி யென்பது ஸத்கைங்கர்யமே.

சோழவந்தானில் சென்ற ஜூலை 21உயன்று ஒரு நக்ஷத்திர சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றது. பி. எஸ். ராமசுப்பையர் "ஜகத் குருவின் அவதாரத்தைப்" பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார். சிறியோரும், பெரியோரும், ஸ்திரீகளும், அநேகர் வந்திருந்தார்கள். இந்த நக்ஷத்திரக்கிளைச் சங்கத்தின் மூலமாக பகவானுடைய அருள் அக்கிராம முழுதும் பெருகவேண்டு மென்பது எமது பிரார்த்தனை;

ஜகத்குருதாஸன்.

நன்மொழி.

முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாநதமே.

—திருமந்திரம் 2506.

விக்கிரக ஆராதனை.

"விக்கிரக ஆராதனை" என்னும் சொற்றொடர் "விக்கிரகம்," "ஆராதனை" எனப் பிரிந்து இறைவனை உருவங்களிலே வழி படுதல் எனப் பொருள் பட்டு நிற்கும்.

இவ்வகைய வழிபாடு நந்தென்னாட்டிலேயே மிகுதியும் பல்கி வளரா நின்றது. இவ்வழிபாட்டைச் சில விவேகிகள் கடிந்தும் வருகின்றனர். அவர் தாம் "இறைவர் அகண்டாகார வஸ்துவாயும் அளவிலாவானந்த மயராயும், ஆதியந்தமில்லாதவராயும், மனவாக்குகளுக் கதீதராயுமிருக்க அவரை மனிதனால் நிருமிக்கப்படும் சிலையுருவங்களிலே பாவித்திறைஞ்சுதல் தேகத்தின் தூய்மை கருதிச் சேற்றில் குளிப்பார் செயல் போலும்" என்பர்.

இவரும் இறைவன் மாட்டு வைத்த அன்பின் மிகுதியால் இன்னணங் கூறு நின்றாராகலின், இவர் கூற்றும் ஒப்பத் தக்கதே. எனினும் நமது விக்கிரக வழிபாடும் ஆன்மாக்கள் எளிதில் வீடடைதற் கேதுவா யிருத்தலை இவர் நன்கு கவனிக்கவில்லை போலும்.

தன்னை வழிபடுவோர் கருத்தினை முடித்து வைத்தல் இறைவனது கருணைக் குணங்களிலொன்று. ஆகவே பதியை வழிபடுவோர் கருத்தில் தோன்றும் உருவங்களை வகித்து இறைவன் தோன்றுதல் நியாயமே யன்றோ?

இன்னும் எப்போதுங் கண்டிராத ஒருவன், ஒருவள் ஒன்றனைப் பற்றி பிறர் கூறுமிடத்து நம் மனத்தின் கண் ஒருருத தோன்றுத லியற்கை யன்றோ? அவ்வுருவும் கேட்டோர் தம் மனத்திடை யொரே தன்மைத் தாய்த் தோன்றுமோ? பல் வேறுபாடுறுமன்றே. இதற்குப் பிரதியாய் படர்க்கையாளனைபோல் ஒரு பட மெழுதி யதனைக் காட்டி அவனைப் பற்றி பிரஸ்தாபித்தால் அவ் வோவியத்தைப் பார்

த்தும் சொல்வதைக் கேட்டும் நிற்கும் சகலரது மனத்திலும் ஒரே வித உருவம் பிரதி பலிக்குமன்றே. அஃதேபோல் இறைவனைப் பற்றி பன்னூற்களினும் பரவும் பனுவல்கள் பார்த்தும் பலரோதக் கேட்டும் நிற்கும் பலர் மனத்தினும் பல் வகைய உருவங்கள் தோன்றுமன்றே. அப் பல் வகைய உருவங்களில் சில மாயா காரிய உருவங்களாகவும் நிகழு மாகலானும், அம் மாயா காரிய வடிவங்களை இறைவன், மாயை தன் முன் முனைந்து நில்லாமையின், ஏன்றுகொள்ளானாகலானும், அவ் வகைய கற்பனை வுருவங்கள் மாந்தர் மனத்திடை தோன்றுதிருக்க அருட்சத்தியி னிடமாக அவன் கொள்ளும் வடிவங்களை வரையறுத்துக் கற்பித்து வைத்தனர் நந்தம் பெருநாடு வந்த திருநான் மறைவலார்.

அருட்சத்தியி னிடமாக வடிவு கொள்ளுங்கால் பதிக்கு யாதொரு விகாரமு மின்மை நூற்களான் உணரக் கிடந்ததே.

இன்னணம் இறைவன் தன்னை வழிபடும் ஆன்மாக்களது பக்குவத்திற் கேற்ப அருட்சத்தியினிடமாக உருவகிக்குங் கால், எப் பொருளுந் தம்முள்ளடங்கத்தா மொன்றினு மடங்காது மேம்பட்டு அப்பாற் செல்லும் அவரது வரம் பற்ற சத்தியே "சிரசாக" வும், சர்வாண்ட பிண்ட சராசர மனைத்தும் நிறைந்து பரிபூரணமாயிருக்கும் அவரது சத்தியே "முகமாக" வும், கோரமாகிய ஐந்து பாசங்களும் தம்மை யணுகாமல் ஒழியத்தக்கதாயுள்ள மல விரோதியான அவரது சத்தியே "இதயமாக" வும்; நுண்ணிய பொருளெவற்றினும் மிக நுண்ணிய அவரது சூக்கும நிலையும், எவ்வுலகங்களுக்கும் காரணமாகிய தர்மமும் "நாபியாக" வும், இச்சா மாத்திரத்தானே சிருட்டியாதி தொழில்களியற்றும் சத்தியே "பாதம், கரம்" ஆகவும், அமைந்து நிற்கும்.

இன்னும், அவரது சர்வோன்னத நிலையே "சிரசாம்," தாம் பிரிதொன்றன் வயப்படாது எவற்றையும் தம் முன் வகித்து நிற்கும் சத்தியே "சிகை" யாம், அவரது ஞான சொரூபமே "இதயம்" ஆம், தமக்குள் தாமே காப்பாய்

தம்முள்ளடங்கிய எப்பொருளினும் வியாபித்து அவற்றைக் காத்து நிற்கும் சத்தியே "சுவாசம்" ஆம், சர்வஞ்ஞதை யாகிய குணமே "நேத்திரம்" ஆம், அவரது பிரதாபமே "அஸ்திரம்" ஆம், ஆரணி, சனனி, ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளே "காரணங்கள்" ஆம், இப்படி இறைவன் சத்திகளே அவருக்கு உருவமாய் விளங்கும். இவ்வகைய இறைவனது உருவத்தை சிலையினிடமாகவும் உலோகங்களி னிடமாகவுமே பெரும்பாலும் அமைத்ததற்கு காரண மென்னை?

காந்தக் கவர்ச்சி அல்லது ஆகர்ஷண சத்தி என்ற ஒருவகை ஆன்ம சத்தி நம்மிடத்தும் உல கத்தி னிடத்தும் நிறைந்திருத்தல் நூலோடு பழகிய நுண்ணறி வுடையோா யாவரு மறியக் கிடந்ததே யாகும். அச் சத்தியானது உயிருள்ளவற்றி லஃதுள்ளளவும், உலோ கங்களில் சுவண்ணம் முதலிய வற்றில் எப்போழ்தத்தும் வியாபிக்கும் தன்மை யுடையது. இம்மின்சாரமனைய ஆன்ம சத்தி சடத்தையும் (இப் பெயருள தொன்றுள தெனின்) சலிப்பிக்குஞ்சதுருடையது. இது இறைவனினது விகசிப்பு வாய்ந்தவோர் உன்னத சக்தியாம். இது மாந்தரனைவரிடத் தும் உண்டெனினும் தம் மனதை யொருவழிப் படுத்தப் பயின்று தமது சத்தியை இச்சையின்படி நடத்தும் பக்கு வம் வாய்ந்த பரமோத்தமர் பால் அளவிறந் ததிகரித்து நிற் கும். இம்மின்சாரம் எல்லா உலோகங்களினும் வியாபிக்கு மெனினும் பலவற்றில் வியாபித்த கணத்திலேயே வெளி யேறிவிடும். பொன், செப்பு முதலியவற்றினும், உயிருள்ள வையாவையினும் இவ் வான்ம சக்தி வியாபித்த மேல் வெ ளிப்படாது அடங்கிக் கிடக்கும். நிற்க.

கருங்கல்லிற்கும் உயிருண்மை நம்மான்றோரால் ஆளப் படுகின்றது. அதனை சின்னாண் முன்னர் பூத பௌதிக ரஸாயன சாத்திரங்களிற் றை வந்த "போஸ்" என்பாரும் பல பரீக்ஷைகள் மூலமாய் வெளிப்படுத்தி வற்புறுத்தியு மிருக்கின்றார்.

சிலையை எத்தனை துண்டுகளாகச் சிதைப்பினும், பொள்ளினும் சிதைபட்ட ஒவ்வோர் பகுதியிலும் பிராண சக்தி தங்கி கேடுறுதிருக்கும் என்பதும் நந் நாட்டினர் கொள்கை. இஃது, எத்தனை துண்டுகளாகச் சிதைப்பினும் சில கொடிகள் முளைத்தற் றன்மை யிழக்கா திருக்குமாறென்க. இன்னும் சிலையினிட மிருக்கும் பிராண சக்தி அளவில் காலம் அதனிடைவதிதல் அறிவுடையோர் சித்தாந்தம். இது கிடக்க.

இறைவன் எல்லா வஸ்துக்களினிடத்தும் பரிபூரணமாய் நிறைந்திருத்தல் நிராக்ஷேபம். எனினும் அறிவுடையறவோர் தங் கருமங்களால் ஈசுவர சாந்நித்தியத்தை சில விசேடமான இடங்களில் மிகைபடச் செய்தல் சாத்தியமேயாகும். அன்னணம் அவர் செய்தலில் விக்கிரகங்களில் இறைவனது சக்தியை தயிரில் வெண்ணெய்போல் பிரகாசிக்கச் செய்தலு மொன்றும்.

விக்கிரகங்களையும் பல ஞான சின்னங்களுடையவனவாய் நிருமித்து ஓரிடத்தில் தாபிப்பதன் முன்னர் தங்கம் முதலிய தகடுகளில் இயந்திரம் வரைந்து அதனூடே பல அக்கரங்கள் வரைந்து அத்தகடுகளை பரிசுத்தமான இடங்களில் வைத்து, அவ்விடங்களில் நூற்கொண்டு சுற்றிய பல கடங்களில் நீரை நிறப்பி, அவ்விடங்களில் ஓம குண்டங்கள் அமைத்து, அவற்றில் வன்னி வளர்வித்து, அறிவொழுக்கம் பக்தி ஞானம் இவையிற்றினை யொருங்கே யுடைய வேதோத்தமர்களால் மந்திரங்களோதுவித்து, கடத்து நீரால் மேற்கூறிய தகடுகளுக்கு அபிடேகம் செய்வித்து, அவற்றை, தாபிக்கப்போம் விக்கிரகங்களுக் கடியில் அமைத்து, மின்சார சக்தியை வெளிவிடாத ஒருவகை மருந்தால் புதைவித்து, வேதியர்களால் அபிமந்திரிக்கப்பட்ட கட நீரால் விக்கிரகங்களையும் ஆட்டுவித்து, அவற்றை வழிபட்டிறைஞ்சுவர் நந்நாட்டுச் சீரிய மக்கள்.

இன்னணம் இவர் நாட்டும் விக்கிரகங்களில் ஈசுவர சக்தியாகின்ற மின்சாரம் முற்றும் பரவிப் பொதிந்து ஆங்கு செல்வோர் மனத்தைக் கவர்ந்து ஒரு வழிப்படுத்தி அதன் வழியே யவர் விரும்பிய பேற்றையு மளித்து இன்புறச் செய்யுமென்க. என்னை? ஓம குண்டங்களில் வன்னி வளர்த்த மாத்திரத்தானே அவற்றைக் கவிந்து சூழ்ந்த ஆகாயம் முற்றும் வெம்மை யுற்றுதீயின் அதிக்கிரமிப்பால் மின்சாரமாகின்றது. அந்தக் தருணத்து வேதியர் சத்தரூபமான மந்திரங்கள், அதாவது பிரார்த்தனை மயமான இருடிகளின் யோசனைக் குறிப்புகள் அவ் வாகாயத்திடை பல மந்திர உருவகமான அலைகளையுண்டாக்குகின்றன. அம்மின்சார மயமான ஆகாயத்தின் சலனமாய அலைகள், மின்சாரத்தை ஈர்க்கும் (ஆகர்ஷிக்கும்) தன்மையுடைய நீரிலும், அக்கரம் வரைந்த தகடுகளிலும் பாய்ந்து மீசமிக்கப் படுகின்றன. அன்னணம் நீரிடைத் தோய்ந்த மின்சாரத்தை வெளிவிடாது தடைப் படுத்தும் நிமித்தமே உஷ்ணத்தையும் மின்சாரத்தையும் கிரகிக்குந் தன்மையற்ற பருத்தி நூலைக் கடங்களில் சுற்றி வைக்கின்றனர். பல நாட்களாக இடைபருதியற்றிய ஜெபங்களாலுண்டாய சூக்கும வலைகள், ஓரளவு ஜலத்தில் இலக்ஷம் அளவு மின்சாரம் செறிந்து, கடநீரில் செறிகின்றன. மேற் கூறிப் போந்த ஆன்ம சக்தியாம் சிதாகாசம் அக்கரம் வரைந்த தகடுகளிலும் அக்கர வடிவமாகவே யமைந் தடங்கும், சத்தம் ஆகாயத்திலுண்டாக்கும் சலனத்தின் வரிவடிவே யக்கரமாகலின். இதுவும் போதாதென வுன்னி மந்திரத்தின் அல்லது சங்கற்பத்தின் மயமான மின்சாரத்தின் திரவ வடிவே யென்னும் தன்மைத்தாய நீரினால் அத் தகடுகளை யபிடேகம் பண்ணுவித்தால் அத் தகடுகளை மந்திர மயமான மின்சாரத்தின் தூல வடிவங்களே யென்னற்குத் தடையாது உலகீர்? இத்தகைய தகடுகளை விக்கிரகங்களின் அடியிற் பதித்து அவ் விக்கிரகங்களுக்கும் மேற் கூறியாங்கு அபிமந்திரித்த கட நீரினால் அபிடேகம் செய்வித்தால், தேவான்ம சொரூபமான மின்

சாரம் அதனைச் சுலபமே கிரகிக்குந் தன்மை வாய்ந்த உருவங்களிலே யூடுருவிச் சென்று நிலைபெறும். அன்னணம் நிலைபெறும் சக்தியானது கால கதியால் குறைபடாது வளர்ந்து வரவேண்டுமென்னுங் கருத்து பற்றியே கர்ப்பக் கிரகத்திலும் அர்த்த மண்டபத்திலும் தீய வொழுக்கங்களுடையார் பிரவேசித்தல் தகாதெனத் தடுத்து, ஸதா வேத மந்திர பாராயணரும் பிராஹ்மணர் என்னும் வாக்கியத்திற் கிலக்கியமா யவரும் ஆகிய மாந்தரே பிரவேசித்தல் நெறியென நிறுத்தினர் நீணிதிச் செல்வர்.

இக் காலத்தில் அக் கர்ப்பக் கிரகத்திலும் அர்த்த மண்டபத்திலும் பலவேசி தாசிகள் வீண் வழக்காளிகள் பிரஸ்தாபமும், சோரவொழுக்கம் வாய்ந்த ஆண் பெண்களின் கண்ணொடி கைசாடை முதலாய வபிநயங்களுமேவேத கோஷத்திற்குப் பிரதியாய் நிறைந்து வியாபித்திருக்கின்றன. நிற்க.

“மின்சாரம் மாந்தராலுண்டாவ தாயிருக்க அது நிறைந்த விக்கிரகங்களில் விசேடமென்னை? என்பார்க்கு, “நன்று நுங்கூற்று! விறகில் அருகி நின்ற தீயும், பாலில் மறைந்திருந்த வெண்ணெயும் மனிதர் கடைதற்றொழிலால் வெளிப்பட்டதை யொப்ப ஆகாயத்திடை செறிந்த ஈசுவர சக்தியின் ஓரம்சமாகின்ற மின்சாரத்தை தம் முயற்சியால் மாந்தர் வெளிப்படுத்தினரே யல்லது அதனை யுண்டு பண்ணினர் என்பது பெரும் பேதமையென்க.

எனவே, மந்திரங்களாகின்ற சங்கற்ப சக்தி நிறைந்துள்ள விக்கிரகங்களும் காந்தக் கவர்ச்சி பெற்று விளங்கலானும், அதிலும் சிலையுருவங்களே காந்தக் கவர்ச்சியை மிகுதியும் சேமித்துக்கொள்ளும் ஆற்றலுடையனவாகலானும், அவை, அவற்றை விரும்பிச் செல்வோரது மனத்தையீர்த்து நல்வழிப்படுத்து மாகலானும், அறிவுள்ளோர் அஃதில்லாராய் இரு பகுதியாகும் ஆலயம் சென்று இறைவனை வழிபடுதல் அத்தியாவசியக மென்க.

ஆகவே, அறிவுடையீர்! இக்காலத்துச் சில துவிஜரிடத்தும், ஏனைய மரபினரிற் சில வேழைகளிடத்தும் பல துர்க்குணங்கள் நிறைந்து ததும்பி வழிந்து வருவதால் அவர் செல்லும் ஆலயங்களில் அவர் தம் எண்ணங்களும் இடம் பெறுவதால் நாளடைவில் இவரது எண்ணங்களாம் துர்நாற்றம் ஏற்கனவே யமைந்துள்ள கற்பூர வாசனையைத் தடிகொண்டு சாடி வெளிப்படுத்தா நின்றது. அதனாலேயே பல வாலயங்கள் க்ஷீணிததும் வருகின்றன. இவை யிற்றினைப் பரிகரித்தல் அறிவுடையோர் செயலாகலான், அவர் பல்லாற்றானும் முயன்று அத்தகைய தீமையைப் படியோடு அறுத்து அறத்தை வளர்த்து மாந்தர் மனத்தைக் கவர்ந்து மேம்பாடுறக் கடவர்.

ஓம் தத் ஸத்.

அ. நாராயணசாமி,
காரைக்கால்.

நன்மொழி.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோ
லாரியன் தோற்றமு னற்றம லங்களே.

—திருமந்திரம் 117.

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமா
யாணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே.

—திருமந்திரம் 131.

ஜகத்குரு அவதாரம். *

சில வருஷங்களுக்கு முன், மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மையார் ஒரு ஜகத்குரு அவதாரம் செய்யப்போகிறார் என்று வெளியிட்டபோது அதைக்கேட்ட ஒவ்வொருவரும் வெகு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அவ்வம்மையைப் போலொத்த மஹாபுத்தி விசாலத்தையும் கியாதியையுமுடைய ஒருவரிப்படி பிரசுரம்செய்வதுபற்றி அதைக்குறித்து நாம் நன்காலோசித்துப் பார்க்கவேண்டுமல்லவா? இப்போது நான் அப்படி எதிர்பபார்ப்பதற்கு உலக சரித்திரத்தினின்றும், சிலவுலகின் தற்கால நிலமையினின்றும், மதங்களினின்றும் மூவ்வித காரணங்கள் எடுத்துக் கூறுகிறேன்.

இவ்வுலகம் நாகரீகமற்ற காட்டு மனிதர்கள் முதல் தொடங்கி எப்போதும் மேன்மேலும் நாகரீகத்தையடைந்து விகாசப்பட்டு வருகிறது. ஆனாலவ்விதம் விகாசமடைவது ஒரேவிதமான நேரானமார்க்கமல்ல. எப்படி சமுத்திரத்தினலைகள் மேலெழும்பியும் பிறகு தாழ்ந்தும் செல்லுகின்றனவோ அங்ஙனமே ஜகத்விகாசமுறையுமிருக்கிறது. சில காலங்களில் இவ்வுலகின் கண் ஒருபெரிய மஹான் தோன்றி அவ்விகாசத்திற்கு ஒரு விசேஷ சக்தியைக்கொடுத்து ஒரு விசேஷமான நாகரீகத்தை ஸ்தாபனம் செய்கிறார். இப்போது ஒரு பெரிய ராஜ்யமாக விளங்கிநிற்கும் இதாலி தேசம் ஒருங்கு சேர்க்கப்பட்டது காரிபால்டி என்ற ஒரு பெரியவருடைய வரவினாற்றான். அவ்விதமே அமேரிக்கா தேசத்து ஐக்கியமகாணங்களைக்கியமாக்கப்பட்டது வாஷிங்டன் என்றவரின் மஹிமையாற்றான். ஜூலியஸ் ஸீஸர் என்ற எரு மஹானில்லாமற்போனால் ரோமாபுரி ராஜ்யம் பெரியராஜ்யமாயிருந்திருக்காது. இந்தியா தேசத்திலும் கௌதமபுத்தரவதரிப்பதற்கு முந்தி நம்முடைய உபநிஷத்தின் தத்வார்த்தங்கள் மறக்கப்பட்டிருந்தன.

---

* மொழிபெயர்ப்பாசிரியர் திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் புரொபஸர் ஆர் ஸ்ரீனிவாஸையர் எம். ஏ.

கீழ்ப்பட்ட ஜாதியார்கள் நிரம்பவும் நிராகரிக்கப்பட்டு வந்தனர். மதம் அநுபவார்த்தமா யிருக்கவேண்டியது போக ஒருவருக்கொருவ ரதைக்குறித்து வாக்குவாதம் செய்வதே சகஜமாயிருந்தது. இச்சமயத்தில் பகவான் புத்தர் தோன்றி அநுபவத்திற்குறிய உபதேசங்களைக் கொடுத்து இத்தேசத்தின் மகோத்தாரணத்தைச் செய்தனர். பாலஸ்தினுவில் கிருஸ்து அவதரித்தபோதும் அரேபியாவில் மகம்மது தோன்றியபோதும் இவ்வித அதர்மங்க ளெங்குமிருந்தன. இது சம்பந்தமாக நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அது யாதெனில் இச்சந்தர்ப்பங்களி லெல்லாம் பெரிய மஹானவதரிப்பதற்கு முன்னமேயே ஜனங்கள் ஒரு விசேஷ நன்மையை எதிர்பார்த்து நிற்கிருர்கள். அநேக புத்திமான்களும் மாதிருகா பக்தர்களும் (Idealists) எங்கு பார்த்தாலுமதைக் குறித்து உபந்யாசங்கள் செய்தும் அவ்விஷய சம்மந்தமான புத்தகங்களை தாராளமாக வெளியிட்டு மிருக்கிருர்கள். அத்தகைய காலங்களில் வசிக்கும் ஜனங்கள் அப்போதிருக்கும் உலக நிலைமையைக் குறித்து அதிருப்தியடைகிருர்கள். அறிஞர்கள் அந்நிலைமை போய் ஒருவித நன்மை யேற்படப் போகிறதாகக் கனவு காண்கிருர்கள். அச் சமயத்தில் ஒரு பெரிய மஹாத்மா அவதரித்து அக் கனவுகளை நினவுகளாக்குகிருர். மேலும், இக் காலத்தில் ஜனங்கள் நிகழும் நிலைமையைக் குறித்து அதிருப்தி அடைந்திருக்கின்ருர்களா இல்லையா என்பதை கவனிப்போம். இந்தியாவில் வர்ணுசிரம சம்பந்தமான அநேக குழப்பங்களிருக்கின்றன; மேலும் சமீப காலத்தில் பல ஜாதிகளான ஜனங்களுக் கிடையில் 'ஐக்கியப்பட்ட இந்தியா' என்கிற ஒரு எண்ணம் குடிகொண்டு நிற்கிறது. எங்கு பார்த்தாலும் பழய தர்மம் போய் புதிய தர்மம் நிலைபெறப் போகிற அடையாளங்க ளநேகம் தோன்றுகின்றன. காங்கரஸ் மஹா ஸபையின் வளர்ச்சியை நோக்குக! எங்கும் ஜனங்கள், இருக்கும் நிலைமையை மாற்ற விரும்புகின்றனர். ஆனல் அப்படி விரும்புவோர்கள் படித்தவர்களே யல்லாமல் பொது ஜனங்களல்ல. அவர்கள் அஞ்ஞானத்திலே மூழ்கி நிற்கின்ருர்கள். ஆகவே, இந்தியா

விலும் ஒரு நிலைமைபோய் வேறுநிலைமைவரும் தருணமிதெ ன்றே தோன்றுகிறது.

இப்போது ஐரோப்பாவில் ஒரு பெரிய யுத்தம் நடைபெறுகிறது. அதைப் பற்றி ஆலோசிக்கும்போது "நாகரீகமுள்ள தேசங்கள் எங்ஙன மிப்படி மிருகப்ராயமான காரியத்தில் பிரவேசித்திருக்கிறார்கள்" என்ற கேள்வி தோன்றுகிறது. இதுவரையில் மேற்குத் தேசங்களில் ஒவ்வொன்றிலும் மற்ற தேசங்களைக் கீழ்ப்படுத்தியே தான் ஒரு நாடு நல்ல ஸ்திதிக்கு வரவேண்டு மென்கிற எண்ணம் பிரபலமாயிருந்தது. ஆகையால் ஒவ்வொரு தேசமும் மற்ற தேசங்களிடத்தில் அவநம்பிக்கையும் பயமும் கொண்டு அவைகளுக் கெதிராக உபயோகப்படுத்த ஏராளமான சைந்யங்களையும் ஆயுதங்களையும் சேகரித்துக்கொண்டே யிருந்தது. வேறு அநேக முக்கியமான விஷயங்களுக் குபயோகிக்க வேண்டிய திரவிய மெல்லாம் மனிதரைக் கொல்லும் ஆயுதங்களுக்கும் கப்பல்களுக்கும் படைகளுக்கு முபயோகப்பட்டு வருகிறது. இவ்விஷய மிப்போதெல்லா ராஜ்யங்களுக்கும் நன்கு விளங்குகின்றது. இப்போது நடைபெறும் யுத்தம் எல்லா தேசங்களுக்கும் ஓர் ஜீவப் பிரேதம்போல் மிகுந்த பயத்தை விளைவிக்கின்றது. ராஜ்யங்கள் தங்களுக்குள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்கிற விதத்தை இந்த யுத்தம் எடுத்துக் காட்டி தாங்க ளைக்கியமாயிருந்து போற் சேனைகள் அவசியப்படாமல் ஸமரஸ பாவத்தை மேற்கொண்டு தங்களுக்கு ளுள்ள காரியங்களை நடத்திக் கொள்ளவேண்டு மென்கிறதையும் நன்றாய் தெளிவாக்கும். ஐக்ய ஐரோப்பா கண்டத்தின் உத்பவத்தையே இந்த யுத்தம் ஸூசிக்கிறது.

பச்சிம தேசங்களில் வியாபார விஷயங்களிலும் ஒருவித மாறுத லேற்பட்டுக் கொண்டிருக்கிறது. யந்திரங்களேற்பட்டதால் கூலிக்காரர்களின் ஜீவனம் கஷ்டமாய் விட்

டது. யஜமானர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும் எப்போதும் சண்டை தான். யஜமானர்கள் தங்கள் வலு வதிகரிக்கும்படி தாங்கள் ஒருங்கு சேருகிருர்கள்; அதே மாதிரி வேலைக்காரர்களும் செய்கிருர்கள். இதனுல் ஒரே சமயத்தில் எல்லா வேலைக்காரர்களும் தங்கள் தங்கள் வேலையை விட்டு விலகும்படியான நிலைமை யேற்படுகிறது. ஆகவே தொழிலின்மையும், அதைச் சார்ந்த கஷ்டங்களும் உண்டாகின்றன.

ராஜ்ய சம்பந்தமான விஷயங்களிலோ, ஒவ்வொரு தேசத்திலும் ஒருவன் ராஜ்யத்தை யாளுகிறதென்பது போய் ஜனங்கள் பொதுவாய் ராஜ்ய பரிபாலனத்தை நடத்த வேண்டுமென்கிற அபிப்பிராயம் பலப்பட்டுக்கொண்டிருக்கிறது. புமான்கள் மாத்திரமே யல்லாது ஸ்திரீகளுக்கும் அவ்விஷயங்களில் அதிகாரம் வேண்டுமென்கிற எண்ணமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஸ்திரீகளுக்குத் தங்கள் நடபடிக்கைகளைப் பற்றின தர்மம் வேறு, புருஷர்களுக்கு வேறு, என்பது தவறென்றும் இவ்விருவர்களுக்கும் ஒரே விதமான தர்ம மிருக்கவேண்டு மென்றும் அநேகர்க ளபிப்பிராயப்பட்டு அவ்வபிப்பிராயத்திற் கிணங்க ஏற்பாடுகளும் செய்கிருர்கள்.

இந்தியாவில் மதத்தின் நிலைமையைக் குறித்து நோக்குங்கால், வித்தை கற்றவர்கள் வைதீக சம்பந்தமான விஷயங்களை நிராகரிப்பதாகவும், ஏதோ ஒரு விதமான ஸமுதாயக் கோட்பாடுகளுக்குக் கட்டுபட சம்மதப்பட்டிருந்தாலும் தற்கால வழக்கங்களைக் கடந்து செல்ல முயலுவதாகவும் தெரிய வருகிறது. பழய சமய முறைகள் ஜீவனில்லாமலிருக்கிறபடியால் ஒரு புதிய சமயாசாரத்தைத் தேடி நிற்கிருர்கள்.

இவ்விஷயங்களை யெல்லா மாலோசிக்குங்கால் ஒரு பெரிய மஹா புருஷன் இப்போது புவியிலவதரிக்க அவசியமிருக்கிறதாகத் தோன்றுகிறதல்லவா?

இப்போதிருக்கும் தத்தளிப்பு இவ்வுலகி லெல்லா தேசங்களேயும், மதங்களேயும், ஜாதிகளேயும் சம்பந்தித் திருப்பதால் வருகிற மஹா புருஷர் ஜகத்குருவாகத் தானிருத்தல் வேண்டும்.

மதங்க ளிவ்விஷயத்தைக் குறித்து என்ன சொல்லு கின்றன வென்று நோக்குங்கால், எல்லா மதங்களும் ஒரு மஹா புருஷரின் வரவைக் குறித்துப் பேசியிருக்கிறதாகத் தெரிய வருகிறது. இவ்விஷயத்தில் எல்லா மதங்களும் ஒன்ருகவே த்வனிக்கின்றன.

ஆகையால் இவ்வித காரணங்களேக் கொண்டு ஒரு ஜகத்குருவின் வரவை இப்போ தெதிர் பார்ப்பது தவருன விஷயமல்ல. அவர் வரவில் நம்பிக்கையுள்ள அநேகர் ஒன்று சேர்ந்து "உதய நக்ஷத்திர சங்க"மென்று பெயர்கொண்ட ஒரு சங்கத்தை யேற்படுத்தியுளர். இவ்விதச் சங்கத்தினவசிய மெல்லாருக்கும் தெரியக் கூடியதே. மஹா புருஷர் விஜயம் செய்யும்போது எவ்விதம் வருவாரென்ப தவரிஷ்டப்படி யல்லாது நாம் நினைக்கும் வண்ணமாவது அல்லது நம்முடைய இதிஹாஸ புராணுதிகளில் சொல்லியிருக்கிற படியாவது இருக்க மாட்டாது. அவர் வரும்போது அவரை மஹா புருஷராக அறியவேண்டுமானல் அவரிடத்தில் விளங்கா நிற்கும் ஸத்குணங்களில் கொஞ்சமாவது நாம் நம்மிடத்தில் பயிற்சி செய்துகொள்ள வேண்டும். ஸாதாரணமாக ஒரு பெரியவ ரிப்புவியில் தோன்றினல் அவரை ஹிம்ஸிப்பது உலக வழக்கம். ஆனல் அவர் காலத்துக்குப் பிறகு அவருடைய உபதேசங்களின் மஹிமை விளங்கும். அவர் காலத்தி லவரை யெதிர்ப்பார்கள், அவரை நிந்தித்துப் பேசுவார்கள். ஏனென்ருல், அவர் ஒருவித அதிகாரத்தோடு பேசுவார். உதய நக்ஷத்திர சங்கத்தில சேர்ந்திருக்கிற நாம் அவருடைய (முன்னே யனுப்பப்பட்ட) தூதர்களே. அவர் வரும்போ தவர் மீது உலகம் சாற்றப்போகிற தூஷணைகளே நாமிப்போதே நம்மாலான வரையில் நம் மீது வாங்கிக்கொண்டு அவ்வளவுக் கவ்வளவு அவர்க் கேற்படும் தடங்கல்களே நிவர்த்திப்போம். நம்முடைய நந்நடத்தை

யாலும், நம்முடைய ஸ்வபாவத்தை சீர்படுத்துவதாலும் நாம் அவரை யறியலாம். நாம் செய்யும் ஒவ்வொரு கடமையையும் அவர் பெயரால் அவர் பொருட்டுச் செய்வோம். ஆத்மக்ஞான ஸம்பாதந மார்க்கத்தை யவர் வெகு விமர்சையாக உபதேசிப்பார். அவ்வுபதேசத்தைப் பெற யோக்கியதையை நாம் சம்பாதிப்போம். ஆகையால் இச்சங்கத்தில் சேர்ந்த நாம் பக்தி, சிரத்தை, சாந்தகுணம் (அல்லது கருணை) ஆகிய இம்மூன்று குணங்களை ஸம்பாதநம் செய்வோம்.

இவ்விஷயங்களை நீங்கள் காரணமில்லாமல் நம்பவேண்டியதில்லை; ஆனா லிதுகளைக் குறித்து நன்றா யாலோசிக்க வேண்டியது அவசியமே.

ஸி. ஜினராஜ தாஸர்.

பத்திரிகை வரவு.

பிரஹ்மக்ஞான சபைகளின் கர்ணாடக பெடரேஷன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும், கர்ணாடக பிரஹமக்ஞான சபைகளின் 'பெடரேஷன்' என்ற 'சேர்க்கை'யால் பிரசுரிக்கப்படும் பத்திரிகை (புல்லட்டின்.) இது கர்ணாடகக் கிளைச்சபைகளின் ஊக்கத்தை வெளியிடுகிறது. பங்களூர் ராணுவஸ்தல (கண்டோன்மண்டு) பிரஹ்மக்ஞான சபையார் பிரஹ்மக்ஞான புஸ்தகங்களடங்கிய பெட்டியைக்கோருகிற சபைக்கு அனுப்பத்தயாராகயிருக்கிறதாயும் அப்படி அனுப்பும் செலவை மாத்திரம், கோருகிற சபையார் பொறுத்துக்கொள்ள வேண்டியதாயும், ஷை பத்திரிகையிலிருந்து வெளியாகிறது. இது நல்ல ஏற்பாடு. இம்மாதிரியே மற்ற பெரிய பிரஹ்மக்ஞான சபைகளும் செய்தால் நலமாகும்.

பரமன் வரவு.

எழுசீரடி விருத்தம்.

சமயமா நதிகள் சார்ந்துவந் துவிழுந்
தத்துவ ஞானவா ரிதியாய்
இமையரா திகளும் மறைகளும் புகழும்
ஏகமாய் எம்குரு வடிவாய்
அமையுமெக் குணமும் குறிகளும் கடந்தே
அவற்றின்அப் பாலதாய் அதீதக்
கமலமீ துளவோர் துரியவீட் டினிலார்
கவின்றரு பொருள்கரு துவமே. (க)

அறுசீரடி விருத்தம்.

ஊன்பார்க்கும் உடற்பொய்மை மெய்யாக
மயங்குகின்ற உலகீர்! இன்பத்
தேன்பார்க்குந் திருவடிக்கீழ்க் குடியாக
இருந்துநாம் திறமாய் வாழ
வான்பார்க்கும் பறவையெனச் சற்குருவின்
அவதார வரவை நோக்கித்
தான்பார்ப்பீர் அவர்வரவைப் பறையறைந்து
முழங்கிடுமின் சகத்து ளோர்க்கே. (உ)

பொன்செய்யும் நன்மையெலாம் பொருளுடையார்க்
கல்லாமற் பொன்ப டைத்தோர்
தன்செய்யும் நலமுளதோ சகமதனிற்
பொன்னுக்கத் தன்மை போல
கொண்செய்யும் எம்மால்ஓர் நலமுளதோ
அமுதமொழிக் குருநா தர்தம்
மின்செய்யும் திருவடிபூண் டகம்அகற்றி
முத்திநெறி மேவு வோமே. (ங)

எண்சீரடி விருத்தம்.

ஓருமொழியும் அருளுருவும் கொண்ட குரு நாதன்
உதித்திடுசெய் தியைஅறிந்தே எதிர்பார்த்தங் கிருப்பீர்!
கருவினையாம் கள்ளமனக் கலக்கமெலாம் ஒழித்துக்
கங்குல்பக லற்றபெரு மின்பமயக் கடலிற்
பெருகநனி திளைநமர்காள்! நேயர்உற வினர்கள்
பேருலகில் அனைவருக்கும் பெம்மான்வர வுணர்த்தித்
தெருவிலெலாம் பறையறைமின் தெளிந்துநல முறவே
தெரிவிப்பீர் ஒருநிலையா யறிவிப்பீர் நீரே. (௬)

ஆறுசீரடி விருத்தம்.

விழித்திடுமின் மலமாயைப் பவஇருளா
தியஅகன்ற விடியற் காலம்
செழித்துமணம் விகசிக்கத் தினகரனும்
பரமகுரு தேவன் இந்நாள்
மொழித்திறமும் கருணையிரு விழித்தடமும்
அருட்பொலிவும் மோன ஞான
வழித்திறமா உதிப்பதைநாம் மணிப்பறைகொண்
டறைந்துலகில் வழங்கு வோமே. (௭)

ஞானனந்தன்.

நன்மொழி.

ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவர்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே.

சத்தமும் சத்த மனனுந் தருமன
முய்த்த வுணர்வு முணர்ந்து மகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே.

திருமந்திரம் 1467, 1468.

சமாசாரம்.

இந்திய ஸ்திரீகளின் சங்கம்:—மதுரை பிரஹ்மக்ஞான மந்திரத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் மத்தியானம் 2—30 மணிமுதல் 3—30 மணிவரை கூடுகிறது. தேவீஸ்தோத்திரத்தோடு ஆரம்பித்து ஏதாவதொரு விஷயம் பேசப்படும். வர்த்தமானப்பத்திரிகைகளிலிருந்து சில முக்கிய விஷயங்கள் சொல்லப்படும். பிறகு இந்தியமாதாவின் ஸ்தோத்திரத்தோடு முடிவுபெறும்.

ஷை சபை பிரஹ்மஸ்ரீ டி. ராமசந்திரராவ், பி. ஏ. பி. எல், (ரிடையர்ட் ஸப்ஜட்ஜ்) அவர்கள் பத்நியார்மாது ஸ்ரீ ராகவம்மாளவர்களால் சென்ற ஜூலை மீ 17௳ ஏற்படுத்தப்பட்டது. அம்மாளவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, பிரஹ்மஸ்ரீ ராயரவர்கள் "பஞ்சயக்ஞத்தைப்" பற்றி அவாகட்கியல்பான "சுருங்கச் சொல்லல், தெளியவுரைத்தல்" என்னும் முறையில் ஆங்கிலத்தில் அழகாய்ப்பேசினதை பிரஹ்மஸ்ரீ பி. ஆர். சுந்தரராஜ ஐயரவர்கள் (லாட்ஜ் இன்ஸ்பெக்டர்) அதே தெளிவோடு தமிழ்ப்படுத்திச் சொன்னார். ஷை மூவரும் சங்கத்தை ஆசீர்வதித்தனர். அதற்குப் பிறகு ஜூலைமீ 29-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் 2—30 மணிக்குக் கூடினார்கள். "சங்கத்தின் பிரயோசனத்தைப்" பற்றி ஓர் பத்திரிகை படிக்கப்பட்டது. தேவீ ஸ்தோத்திரத்தோடு முடிவு பெற்றது.

இந்தியாவில் இதுவரை அடையாற்றிலுள்ள தலைச்சங்கத்திற்கு 9 கிளைச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு தெருவிற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் இதன் கிளைச்சங்கங்கள் ஏற்படவேண்டும். கோவில்களிற்போல் தற்காலத்தில் பொதுநோக்கமான சங்கங்களிலும் பகவானுடையவும் மஹான்களுடையவும் அருள் விசேஷமாய் பெருகுகிறதென்பது எமது துணிவு.

இந்தியா முழுமைக்கும் இச்சங்கத்திற்குத் தலைவராயுள்ள ஸ்ரீமதி டோரதி ஜினராஜதாஸ அம்மாளவர்களுக்கும் இச்சங்கத்தின் வரலாற்றைத் தெரிவித்திருக்கிறோம்.

(128-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்று ஸ்தாபிக்கவேண்டும் என்றும், இப்போதிருக்கும் ஸர்வ கலாசாலைகள்போல அந்த பீடத்தாரும், கலாசாலைகளைச்சேர்த்து பரிக்ஷைகள் நடத்தித் தேறினவர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கவேண்டுமென்றும், அதை ராஜாங்கத்தாரிடமிருந்து உதவிப் பணம் பெறாமல் நடத்தவேண்டும் என்றும், இந்திய தத்துவ சாஸ்திரங்கள், சரித்திரம், முதயவிஎல்லாம் இந்தியா சம்பந்தமாகவே முக்கியமாய் இந்த ஏற்பாட்டில் கற்பிக்க வேண்டுமென்றும், அதைச்சேர்ந்த கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு அவரவர் மத சம்பந்தமான பயிற்சியும் கொடுக்க வேண்டு மென்றும், மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையவர்கள் உத்தேசித்து, இந்த வித்யாபீடத்தில் சேர வேண்டும் என்று கோரி இந்தியாவில் உள்ள முக்கியஸ்தர்களனேகருக்கு எழுதினார்கள். அதற்கு அவர்களும் சம்மதித்தார்கள். இந்தவித்யா பீடத்தின் காரியங்களை முதன் முதல் நடத்திவர ஸ்ரீ அருண்டேலையும் அம்மையாரவர்கள் நியமித்தார்கள். வித்யாபீடம் சட்டப்படி ஸ்தாபித்து முடியும்வரை மதனப் பள்ளியிலேயே சென்னை சர்வ கலாசாலையைச் சேர்ந்த கல்லூரியுடனே புதிதாக ஸ்தாபிக்கப்போகிற இந்திய வித்யா பீடத்துக்குச் சேர்ந்த முதல் பள்ளிக்கூடமாக ஒன்றும இப்பொழுதே ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். ஸ்ரீமான் அருண்டேல் இப்போது நீலகிரியில் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால், மற்றவர்கள் அவர் செய்யவேண்டிய காரியங்களை செய்து வருகிறார்கள். இந்த மதனப் பள்ளி இந்திய ஜாதீய கலாசாலையின் முயற்சி நன் முயற்சியாகுக. இந்தக் கல்லூரியையும் இந்திய வித்தியா பீடத்தையும் நன்றாய் நடத்த ஏராளமான பொருள் வேண்டும். இந்தியரனைவரும் பொருள் கொடுத்துதவுவாராக.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

ஒரு கதை.

ஒரு தாத்தாவைச் சுற்றி சுந்தரம், வெங்கடராமன், மீனாக்ஷி, கோமதி, ஜானகி, முதலிய குழந்தைகள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். காலம் மாலை, விளக்கு வைத்த சமயம்.

குழந்தைகள் எல்லாம்:—ஒரு நல்ல கதை சொல்லுங்கள் தாத்தா. அன்றைக்குச் சொன்ன மாதிரி ஒன்று சொல்லுங்கள்.

தாத்தா:—எனக்கு சிரமமாயிருக்கிறது. நாளைப் பார்த்துக்கொள்ளுவோமே.

குழந்தைகள்:—முடியாது. இன்று தான் சொல்ல வேண்டும். நாங்கள் உங்களை விடவே மாட்டோம். உம். சீக்கிரம் சொல்லுங்கள். ஆகட்டுமா?

தாத்தா:—ஏதடா இது, விடமாட்டீர்கள் போலிருக்கிறது! சரி. சொல்லுகிறேன். விஷமம் பண்ணாமல் கவனமாய்க் கேளுங்கள்.

சுந்தரம்:—நல்ல தாத்தா எங்கள் தாத்தா.

வெங்கடராமன்:—பெரிய கதையா யிருக்கணும் தாத்தா.

ஜானகி:—யார் கதை தாத்தா?

மீனாக்ஷி:—சும்மா இருங்கள். தாத்தாவுக்கு கோபம் வந்தால் கதை சொல்லமாட்டார். இதோ பார், சொல்ல ஆரம்பித்து விட்டார், பேசாமல் கேளுங்கள்.

தாத்தா:—ஒரே ஒரு காடாம். அந்தக் காட்டிலே ஒரு பாகத்திலே ஒரு பெரிய நந்தவனம் இருந்தது. அது வெகு அழகாயிருந்தது. அந்த நந்தவனத்திலே ஒரு பெரிய குளம் தண்ணீர் நிரம்பி யிருந்தது. அதிலே செந்தாமரை புஷ்பங்களும், அல்லி புஷ்பங்களும் கருநெய்தல் புஷ்பங்களும் இருந்தன. அந்தக்குளத்தைச்சுற்றி மரங்கள். மரங்களில் இனிமையான பழங்கள் நிறைந்திருந்தன. சமீபத்தில் புஷ்பச் செடிகளும் இருந்தன. குளத்தின் கரையில்

கூரையினால் கட்டப்பட்ட சிறிய வீடு இருந்தது. அது வெகு சுத்தமாயும், குளிர்ச்சியாயும் இருந்தது. தெற்கைப் பார்த்துக் கட்டப்பட்டு, குளத்தின் கரையி லிருந்ததால் குளிர்ந்த தென்றல் காற்று வீசிக்கொண்டிருந்தது. பக்ஷி கள் சப்தத்தைத் தவிர வேறு ஒரு சப்தமும் கிடையாது. அந்த இடத்துக்குப் போன ஒருவரும் திரும்பி வர இஷ்ட மில்லாமலிருக்கும்படி அவ்வளவு ரமணீய மாயிருந்தது.

ஜா:—அந்த நந்தவனத்துக்குப்போவோமே, தாத்தா, கூட்டிக்கொண்டு போங்களேன்!

மீ:—சும்மா இரு. கதையைக் கேள்.

தாத்தா:—அங்கே ஒரு பெரியவர் இருந்தார். அவ ரைப் பார்த்தாலே ஏதோ மஹான் என்று தோன்றும். வெள்ளை வெளேர் என்று அவர் தாடி அவர் அகண்ட மார் பை மறைத்திருந்தது. அவர் கண்கள் மிகவும் பிரகாசமா யும் கருணை நிறைந்து மிருந்தன. முகம் சாந்தமாய் மலர்ந் திருக்கும். குழந்தைகளைக் கண்டால் அவர் முகம் மலர் ந்து அவர் கண்கள் அன்புடன் ஒளிக்கும். வெகு காலமாக அவர் அங்கேயே யிருந்து தபசு செய்து வந்திருக்கிறார். எப்போது அவ்விடத்துக்கு வந்தார் என்று ஒருவருக்கும் தெரியாதாம். அவரைப் பற்றி ஒரு விசேஷம் சொல்வார் கள். அவருக்குக் கோபமே கிடையாதாம். கோபத்தை முற்றிலும் ஜயித்து விட்டாராம். பொறுமையே ஒரு சரீ ரம் எடுத்துக்கொண்டு வந்ததுபோல் ஜனங்கள் அவரைக் கொண்டாடினார்கள்.

சுந்தரம்:—அவர் பேர் என்ன, தாத்தா?

தாத்தா:—அவருக்கு முதல் என்ன பெயரோ அது ஒருவருக்கும் தெரியாதாம். அவர் பொறுமையைப் பார் த்து அவரை க்ஷாந்திவாதி என்று எல்லாரும் சொல்லுவார் கள். அப்படி யென்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

மீனா:—எனக்குத் தெரியும். க்ஷாந்தி என்றால் பொ றுமை, வாதி யென்றால் சொல்லுகிறவன். க்ஷாந்தி வாதி

யென்றால் எப்போது பொறுமையா யிருக்கவேண்டுமென்று உபதேசிப்பவர்.

தாத்தா:—பேஷ்! அது தான் அர்த்தம். அடுத்து உள்ள நகரங்கள் கிராமங்களிலிருந்து, பெரியவர்களும், யோக்கியர்களும் நல்ல காலம் போக்குவதற்காகவும், க்ஷாந்திவாதியைத் தரிசித்து அவர் கிருபையை அடையவும், வருவார்கள். அவரும் அவர்களை அன்பாய்க் கூப்பிட்டு, நல்ல உபதேசங்களைச் செய்து, அனுப்புவார். இந்த ஆசிரமத்தில் எப்போதும் சாந்தமாயும் அமைதியாயும் இருக்கும். கோபம், தாபம், அகங்காரம் எல்லாம் அங்கே வந்தவர்களுக்குக் கூடப்போய் விடும். ஒருவரும் ஹிம்சிக்காமலிருப்பதாலே அங்கே நாநாவிதமான பக்ஷிகளும், அழகிய மான்களும், பயமற்றுத் திரிந்தன. இப்படி அந்த ஆசிரமத்தில் அந்தப் பெரியவர் காலக்ஷேபம் செய்து வருகையில் வேனிற் காலத்தில் ஒரு நாள் அந்த தேசத்து ராஜா உல்லாசமாய் நல்ல குளர்ச்சியான இடத்தில் போய் இருக்க வேண்டுமென்று நினைத்தார். எந்த இடத்தில் போயிருந்தால் சௌகரியமாயும், சௌக்கியமயும் இருக்கும் என்று விசாரிக்கையில், இந்தக் காட்டில் இருக்கும் இந்த நந்தவனத்தைப்போல அவ்வளவு அழகும், குளிர்ச்சியுமான ஸ்தலம் அந்த ராஜ்யத்திலேயே கிடையாது என்று மந்திரிகள் சொன்னார்கள். உடனே ராஜாவின் மனைவிமார் நூற்றெட்டுப் பேரையும் அவர் அவர்கள் பல்லக்கில் ஏறி அந்த நந்தவனத்துக்கு சேடிகளுடன் போகும்படி உத்தரவளித்து தானும் பரிவாரங்களுடன் அந்த ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார். ராஜா வாசுகையாலே நந்தவனத்திலும் அதற் கடுத்த காட்டிலும் வேண்டிய கூடாரங்கள் அடித்து அந்த இடமே ஒரு சிறிய பட்டணம் மாதிரியாய் விட்டது. ஆனால் அரசனும் அவன் மகிஷிகளும் மட்டும் நந்தவனத்திலேயே இருந்தார்கள்.

(தொடரும்.)

சோமசன்மா.

பத்திரிகை வரவு.

பிரபஞ்சமித்திரன்:—இது சென்னையில் ஆதிவாரந் தோறும் பிரசுரமாகும் ஓர் அழகான தமிழ்ப் பத்திரிகை. இந்திய ஜனஸமூகம் நெருங்கிய ஒற்றுமையோடு வாழவேண்டிய வழிகளைச் செவ்வையாய் எடுத்துரைக்கிறது. மேற் கூறிய நோக்கத்தோடு நம் தேச வியவகாரங்கள் எல்லாவற்றையும் பாரபக்ஷமின்றி ஆராய்ந்து வெளியிடுகிறது. சென்ற மாதத்தின் மூன்று சஞ்சிகைகளைப் பார்த்ததில் மாது ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் அம்மையார் பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட விஷயமாய், வெகு அழகாய் அப் பத்திரிகை தன் அபிப்பிராயத்தை தைர்யமாய்க் கூறியிருக்கிறது. இதில் எழுதப்படும் விஷயமும் விநயமும் நமது பெண்மக்கட்கு நல்ல பாஷா ஞானத்தை யூட்டக் கூடியதாயுள்ளன. இதன் வருஷ சந்தா ரூ 3 தான். ஒவ்வொரு வாசக சாலையிலும் இப் பத்திரிகை யவசியமிருக்கவேண்டியது. நந் தேச ஊழியத்திற் குரிய ஓர் நல்ல சாதனமாக இப் பத்திரிகை தீர்க்காயுஸ் உடையதாயிருக்க வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. பத்திராசிரியர் ஸ்ரீமான் P வரதராஜுலு நாயுடு அவர்கள், திருப்பூர், கோயமுத்தூர் ஜில்லா.

இந்திய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு வேண்டுகோள்:—சென்னை வேப்பரியில், ஸங்கீத சத்சம்பிரதாய தீபிகையின் பத்திராசிரியரும் வைணிக வித்வானுமான எஸ். வி. அரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்கள் இந்திய சுதேசிய சாமான்களை மட்டும் விற்பனை செய்வதற்காக ஒரு பண்டகசாலை ஏற்படுத்துவதற்காக ஒரு யுக்தியான ஏற்பாட்டைப்பலருடைய பரிசீலனைக்கும், அங்கீகாரத்துக்கும் உபயோக மாகுமாறு பிரசுரித்திருக்கிறார். பங்கு ஒன்றுக்கு 250 ரூபாயாக 5.000 பங்குகள் சேர்த்து, மொத்தம் ரூ 12 50,000 முதல் ஒருவரும் 5 பங்குகளுக்குமேல் எடுக்கக் கூடாது. அப்பொழுதுதான் எங்கு பார்த்தாலும் இம் முயற்சியை ஆதரிப்பார்கள். மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் 50 மாதத்தில் பங்குக்காரர்கள் முதலைச் செலுத்தவேண்டும். ஒவ்வொரு மாதமும் வசூலாகிற 5×5000—25.000 ரூபாயில் 250 ரூ ஆக 10 சீட்டுகள் மொத்தம் பங்குக்காரர்களிலிருந்து பிரேஸ். எவர்களுக்கு பிரேஸ் விழுகிறதோ அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்கிறதில்லை. ஆனால் அந்தத் தொகையை அடுத்த மாதப் பங்குத் தொகைகளுக்காக கம்பெனியாராலேயே வரவு வைக்கப்படும். 2500 ரூ போக பாக்கி ரூ 22,500யும் கம்பேனியின் காரியத்துக்காக மாதா மாதம் உபயோகப்படுத்த வேண்டும். இவ்விதம் செய்வதால் ஜனங்களும் உற்சாகமாகச் சேருவார்கள். ஒரு விதத்திலும் நஷ்டம் ஏற்பட

மாட்டாது. $4\frac{1}{2}$ வீதம் வட்டி வீதமே ஏராளமான பணம் எற்படமொ கையால் வியாபாரத்தில் இதைவிட அதிக வருமானம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரி பற்பல ஊர்களிலும் செய்ய லாம் வேண்டுவோர் தெரியவேண்டிய விபரங்களை மேற் கூறியவரிடமிருந்து எழுதிப் பெறலாம்

புத்தக வரவு.

"மரணபயம் வேண்டாம்" ஆங்கிலத்தில் ஸ்ரீமான் லெட் பீடர் என்ற பெரியவர் எழுதியிருந்த ஒரு சிறுபுத்தகத்தை, மதுரை பிரஹ்மக்ஞான சபைத்தலைவராயிருந்த, காலம் சென்ற ஸ்ரீமான் ப. நாராயணையரவர்கள் தமிழில் மொழி பெயர்த்து பூர்ணசந்தி ரோதயத்தில் பலமாதங்களாய்ப் பிரசுரித்திருந்தார். அம்மொழி பெ யர்ப்பை புத்தக ரூபமாக காசி இந்தியன் செக்ஷன் ஜெனரல் செகி ரிடேரியவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இது மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ்காரரால் வெகு அழகிய சிறுபுத்தகமாக அச்சிடப் பட்டிருக்கிறது. இப்புத்தகத்தைப் படிப்போர் இது பாஷாந்தரத் திலிருந்ததை மொழி பெயர்த்து எழுதியதாக எண்ணமாட்டார்கள். நடை மிகவும் தெளிவாகவும், அழகாகவும் இருக்கிறது. சொற்சோ ர்வு பொருட்சோர்வு இல்லை. படிப்பதற்கு மிகவும் ஸரஸமாகயிருக் கிறது. ஆங்காங்கு பகவத்கீதை, குறள், திருமந்திரம் முதலிய க்ரந்தங்களினின்று மேற்கோள்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியே எல்லா மொழி பெயர்ப்புகளும் அழகாக அமையுமா யின், அவைகளைத் தமிழறிஞர் ஏராளமாக வாங்கிப்படித்து மிக்க பயன் எய்துவார்கள் என்பதில் ஐயமில்லை. இதில் கூறப்பட்ட விஷயமோயாவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷ யம். ஹிந்து மதத்திலும் மகம்மதிய மதத்திலும் கிறிஸ்தவ மதத்தி லும் மற்ற மதங்களிலும் "மரணம் என்றால் என்ன? மரணத் திற்குப் பிறகு என்ன ஸ்திதியில் ஜீவன் இருக்கிறான்? பாபியின் கதியென்ன? புண்ணியன் கதியென்ன? இரண்டும் கலந்த சா தாரண மனிதன் கதியென்ன?" என்ற கேள்விகளுக்கு ஏற்ற விடையானது அரிய க்ரந்தங்களில் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் சாதாரணமான மனிதனுக்கு மரணம் என்றால் ஒருவிதமான பய மானது உண்டாகின்றது என்பதில் சந்தேகமில்லை. தன்னுடைய குழந்தை தகப்பன் தாயார், மனைவி முதலிய அன்புக்குறைவிடமா கும் யாரையாவது இழக்கநேரிட்டால் அப்போது சாதாரணமனி தன் இரண்டுவிதமாய் துக்கிக்கின்றான். தனக்கு உற்ற நஷ்டத் தைப்பற்றி விசனிக்கிறான். தன் கண்ணுக்குத் தென்படாமல் போன ஜீவனுடைய கதியென்னவாயிற்றோ என்று இரங்குகிறான்

இவ்வித இரண்டு சந்தேகங்களையும் தீர்க்கவல்ல ஒரு ஞானியானவர் சாதாரண ஜனங்களுக்குப் புலப்படும்படியும், யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஏற்றபடியும், மரணத்தின் பிறகு நிகழும் சம்பவத்தைப்பற்றி உபதேசம் செய்வாரானால் அதனால் சாதாரண மனிதனுடைய மனது தெளிவாகும் என்பதில் சந்தேகமில்லை. இந்த கிரந்தத்தின் மூலத்தை எழுதினவர் பரமஞானி. மிகவும் கடினமானதும் ரஹஸ்யமானதுமான விஷயத்தையும் சாதாரணமனிதனுடைய யுக்திக்கும் அனுபவத்திற்கும் கூடத்தெரியும்படி விவரிப்பதில் தேர்ந்த நிபுணர். எழுதப்பட்ட விஷயமாய் விசேஷமான நிச்சயக் ஞானத்தைப் பெற்றவர். அவரால் எழுதப்பெற்ற புத்தகத்தை மொழிபெயர்த்தவரும் ஆங்கிலம் திராவிடம் இரண்டிலும், ஞானத்திலும், மிகத்தேர்ச்சி பெற்றவர். ஆகையால் இப்புத்தகம் வாசிப்போர் மனத்தைக் கவரத்தக்கதாய் ஏற்பட்டிருப்பது ஆச்சரியமில்லை. இதன் விலை அணா இரண்டு மட்டும். வேண்டுவோர் மதுரை பிரஹ்மஞான சபைக்கு எழுதித்தாமும் படித்து பிறருக்கும் அதிலும் முக்கியமாய் காலஞ்சென்ற இஷ்டரைப்பிரிந்து ஆராத்துயரடைந்தவர்களுக்கும் கொடுத்துதவுவாராக.

சமாசாரம்.

பிரதமத் திருவாங்கூர் நக்ஷத்திரக் கூட்டம்.

திருவாங்கூரைச் சேர்ந்த திருவெட்டாற்றில் ஜூலை 17, 18உ களில் பிரதமத் திருவாங்கூர் நக்ஷத்திரக் கூட்டமானது கூடிற்று. சகோதரர் ஆர். ஸ்ரீனிவாசன், எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் அக்கிராசனம் வஹித்தார்கள். இக் கூட்டத்தில் நடந்தேறிய சகல நடபடிக்கைகளும் சுவ பாஷைகளிலேயே நடந்தன. மேனாட்டு வழக்கத்தை யனுசரித்து ஒருவர் பேசும்போது சபையோர் தம் ஆமோதிப்பைக் காட்டுவதற்காக கரகோஷம் செய்வது இப்போது சாதாரண வழக்கமாய்விட்டது. அது நம்முடைய தேசத்துப் பூர்வீக சம்பிரதாயமல்ல. சிற்சில சமயங்களில் பேசுவோரின் வாக் பிரவாஹத்தைச் தடுத்து விடுகிறதுடன் கேட்போர் காதையும் கிலேசப் படுத்துகிறது. சிற்சில சமையங்களில் பாட்டுக் கச்சேரிகள் நடக்கும்போதும், கரகோஷம் செய்து விடுகிறார்கள். அது கர்ணகடோரமாயிருக்கிறதென்று ரஸிகர்கள் ஒப்புவார்கள். இந்த நக்ஷத்திரக் கூட்டத்தில் இத்துர்வழக்கத்தை முற்றிலும் நிறுத்தி விட்டார்கள் என்றறியச் சந்தோஷமடைகிறோம்.

மேற் கூறிய கூட்டம் தங்கியிருந்த சபா மண்டபத்தை வெகு விமர்சையாக அலங்கரித்திருந்தார்கள். ரோஜா வர்ணக்கரையிட்ட மேல் விதானமானது நீல நிறமான நக்ஷத்திரங்களால் அலங்கரிச்

கப் பெற்றிருந்தது. சுவர்களிலும், பக்கங்களிலும், திரும்பிய விடமெல்லாம், நக்ஷத்திரங்கள் தான். எவ் விஷயமாய்க் கூடியிருக்கிறோம் என்று எல்லோருக்கும் செவ்வனே விளக்கிற்று. வந்திருந்த சகலரும், நல்வரவும், அன்பும், சந்தோஷமும், சகோதர பாவமும் நிறைந்து மலர்ந்த முகத்தினராயிருந்தனர். 17-ஆம் தேதி யன்று, நக்ஷத்திர ஸ்தோத்திரம் ஒன்று தமிழில் பாடப்பெற்ற உடன் அக்கிராஸனர் இந்தியாவில் இது மாதிரி கூட்டம் இதுவரை கூடினதில்லையென்றும், இக் கூட்டத்தின் பிரயோஜனத்தையும் விளக்கி, உலகத்தில் தற்காலம் வெகு விசேஷம் பொருந்தியதென்றும், அத்தகைய காலத்தில் நக்ஷத்திர சங்கங்கள் அவசியங் கூடவேண்டுமென்றும், கூறினார். சகோ. வி. கே. நாயரவர்கள், நக்ஷத்திர சங்கங்களின் ஆவசியகத்தை யுக்திகளால் நிரூபித்தார். லோககுருக்கள் இதற்கு முன் அவதரித்துச் செய்த உபதேசங்களைப் பற்றி, சகோ. என். பி. பரமேசுவர ஐயர் அவர்கள் பேசினார்கள். பின்னர், சகோதர பாவத்தை ஒவ்வொருவரும் பாராட்டி நடந்தால் பரமன் வரும் போது அவரை அறிய முடியும் என்ற பிற்கூற்றுடன் அக்கிராஸனர் அன்றைய தினச்சந்தப்பைப் பூர்த்தி செய்தார்.

அன்றிரவு 9-மணிக்கு சகோ. இ. வி. நாராயணையர் தாமாஜி சரித்திரத்தை வெகு அழகாக ஹரிகதையாக நடத்திக்களியூட்டினர். மறுநாள் நக்ஷத்திர சபை அங்கத்தினர் கூட்டத்தில் சகோ. வி. கே. நாயரவர்கள் பேசினார்கள். அதற்குப் பிறகு, அக்கிராஸனர், கேட்போர் பிரசினங்களுக்கு, உத்தரமளித்தனர். பின்னர் சகோ. வி. கே. நாயரவர்கள் ஸ்திரீகளுக்கு என்று ஒரு பிரசங்கம் செய்தனர். சபையாரில் ஒருவரான ஒரு பெண்மணி நாயரவர்களுக்கு நன்றி கூறி சில இனிய மொழிகளைப் பேசினார். அங்கு கூடியிருந்த பெண்மணிகளபிப்பிராயப்படி ஸ்திரீகளின் நக்ஷத்திர சங்கமும் ஏற்பாடாயிற்று. ஸ்ரீ காத்யாயனி அம்மாள் காரியதரிசியாகவும், வேலுத்தம்பியாரின் மனைவியார் தலைவராகவும் அமைந்தனர். 50 பேர் அங்கத்தினராய்ச் சேர்ந்தார்கள்.

அன்று நடந்த காரியா லோசனைச் சந்திப்பில் சகோதர ஸ்ரீனிவாச ஐயரையும் பரமேசுவரையரையும் கூட்டத்தின் அக்கிராசனராயும் காரியதரிசியாயும், மற்ற சில அங்கத்தினரையும் தேர்ந்தெடுத்தனர். அப்பால் நக்ஷத்திர சேவகர்கள் சபையொன்று நிகழ்ந்தது. சிறுவர்கள் சிறு பிரசங்கங்கள் செய்தனர். அப்பால் அவர்கட்கு சகோ. வி. கே. நாயர் அவர்கள் வெகு அழகாக உபந்யாசம் செய்தார். மாலையில் பொது ஜனக் கூட்டத்தில் சகோ. வி. ஜினராஜ தாஸரவர்களுடைய அன்பையும், நன்மதிப்பையும் காட்டிய தந்தியை அக்கிராசனர் படித்தனர். பிறகு சகோ. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தமிழ் நூற்களில் பரமனது வரவைப் பற்றிக் கூறியுள்ள பாட்டுக்களையும் முக்கியமாய் ராமலிங்கப் பரதேசியின் திருவருட்பாக்களையும் எடுத்துக் கூறினர். அப்புறம் இரு சிறுவர்கள் அழகாய்ப் பேசினர். அப்பால் அக்கிராஸனபதி யவர்கள் பிற்கூற்றுடன் கூட்டத்தை முடித்தனர்.

இச் சமயத்தில் கேரள தேச நக்ஷத்திரத்தலைச் சங்கமொன்று, ஸ்தாபிக்கப் பெற்றது. தாரகதூதன் என்ற ஒரு பத்திரிகையும் துவக்குவதாகத் தீர்மானிக்கப் பெற்றது.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல் ஏன் காணப்படுகிறீர்கள்!

எங்கள் தர்பார் கேச கலாப்பை

ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்து விடுகிறதைத் தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பி விடுகிறது. மற்ற தைலங்களை வெகு நாள் விடாது தடவி வந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக்கருப்பாகி விடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபாய் 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்

வைரம் அண்டுகம்பெனி
3. இருளப்பன் தெரு மதராஸ்.

எங்களைப்பற்றி

என்ன செல்லுகிறார்கள்?

ஆந்திரா, இந்த ஔஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரிதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி, இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் நற்குணமே காரணம்.

பெண்கல்வி, அவர்களுடைய பொறுமையேதான் வியாபாரத்தை அதிகப்படுத்துகிறது. இப்பொழுது உலகெலாம் பரவுகிறது

ஞானபானு, இந்த ஔஷதாலயம், "பொறுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள், இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிகமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 212 பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றியென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தைப் பற்றியேதான்.

விபரமான கேட்லாக்கை விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

45, மேலக்கோபுரவீதி, மதுரை